## 1. வரலாறு பற்றிய இஸ்லாமிய நோக்கு: (இஸ்லாமிய வரலாற்றின் தனித்துவமான பண்புகள்)

### 1.1 இஸ்லாத்தின் பார்வையில் வரலாறு:

வரலாறு என்பது மனித சமூகம் தோன்றிய காலந்தொட்டே தோற்றம் பெற்ற ஒரு கலையாகும், அது தொன்மைக் காலங்களில் இன்று போல் இலகுவான வடிவங்களில் காணப்படாத போதிலும் வாய் வழிமூலம் ஒரு தலைமுறையிடமிருந்து மற்றைய தலைமுறைக்கு கைமாறப் பட்டும், பின்னர் அடையாளங்கள் குறியீடுகள் சின்னங்கள் போன்ற பல்வேறு வடிவங்களில் பாதுகாக்கப்பட்டும் பரிமாறப்பட்டும் வந்தது, எழுத்துக்கள் எழுது கருவிகள் கடதாசி போன்றவை தோற்றம் பெற்றதிலிருந்து அது தனக்கென தவிர்க்க முடியாத ஓர் இடத்தினை அடைந்து கொண்டது.

இத்துறைக்கு இஸ்லாம் முக்கியத்துவம் அளித்துள்ளதுடன் அதன் பக்கம் கவனம் செலுத்து மாறும் அறிவுறுத்துகின்றது. அல் குர்ஆன் ஓரிடத்தில்: ''உமது மனதை திடப்படுத்து வதற்காக தூதர்களின் செய்திகளை நாம் உமக்கு சொல்லித் தருகிறோம், அவர்களது அனைத்து கதைகளிலும் சிந்திப்பவர்களுக்குப் படிப்பினை இருக்கிறது'' எனக் குறிப்பிடுகின்றது. அதாவது முன்னோர்களின் வரலாற்றின் பின்வருவோருக்கு சிந்திக்கவும் படிப்பினை பெறவும் வாய்ப்பும் தேவையுமுள்ளதை அல்குர்ஆன் பல இடங்களில் குறிப்பிடுவதுடன், அல்குர்ஆனிலும் நபி மொழிகளிலும் நபிமார்கள், றஸுல்மார்கள் அவர்களது சமுதாயங்களுடன் தொடர்புபட்ட பல்வேறு சம்பவங்கள், வரலாற்று நிகழ்வுகள் உறுதிபடக் கூறப்படுதும் வரலாற்றுக்கு இஸ்லாம் வழங்கும் முக்கியத்துவத்தினை சான்றுப்படுத்துகின்றது.

உலகிற் தோன்றிய ஒவ்வொரு சமூகத்திற்கும் தனியான வரலாறு இருக்கின்றது, அவை அனைத்துமே தத்தமது சந்ததிகள் பயன் பெறுவதற்காக அவற்றை விட்டுச் செல்லும் ஆயினும் உரிய வடிவில் அவை பாதுகாக்கப்படாதவிடத்து அவை காலத்தால் அழிந்து விடுவது தவிர்க்க முடியாது போய்விடும்.

### 1.2இஸ்லாமிய வரலாறு தொகுக்கப்படலும் பின்னணிகளும்

முஸ்லிம்கள் உலகளாவிய சமூகம் என்ற வகையில், உலகில் மனித இனத்தின் பிரசன்னம் தொடக்கம் யுக முடிவு வரையிலும் அவர்களது வரலாறு பேணப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இவ்வரலாற்றின் தொகுப்பு பாதுகாப்பு நம்பகத் தன்மை போன்றவற்றை எடுத்து நோககும் போது பின்வரும் மூன்று முக்கிய கட்டங்களைச் சுட்டிக்காட்ட முடியும்:

***முதலாம் கட்டம்***:

வரலாறு தனித்துறையாகப் பதிவு செய்யப்படவில்லை. நபி (ஸல்) அவர்களதும் குலபாஉர் றாஷிதூன்கள் காலப் பகுதியிலும் வரலாற்றுச் செய்திகள் வாய்மூலச் செய்திகளாகவே பரிமாறப்பட்டுவந்தன. இக்காலப்பகுதியில் அல்குர்ஆனும் அதுசார்ந்த விடயங்களுடன் ஹதீஸ் களும் ஓரளவு எழுத்துருப் பெற்றன. இஸ்லாமிய வரலாறு இவற்றுடன் நெருக்கமான உறவு

கொண்டது என்ற வகையில் வரலாற்றுடன் தொடர்புபட்ட பல விடயங்கள் இப்பதிவுகளுள் இடம் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத் தக்கதாகும். ஆயினும் வரலாறு என்னும் தனித்துறை வளர்ச்சியும் தொகுப்புக்களும் பெரும்பாலும் உமையாக்கள் ஆட்சிக்காலத்திலேயே துவங்கப் பெற்றுள்ளது அத்துடன் அது தனி நபர் முயற்சி ஊக்கம் என்பவற்றிலேயே தங்கியும் காணப்பட்டது.

இக்காலப் பிரிவில் குறிப்பிட்ட சில நிகழ்வுகள் அல்லது சில பரம்பரை தொடர்பான தொகுப்புக்கள் ஏதேனுமொரு போர்தொடர்பான செய்திகள் போன்றன வாய்வழிமூலம் பள்ளி வாசல்கள், கற்கை அமர்வுகள் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் பொது உரைகள் மூலம் மக்களுக்கு கொண்டு செல்லப்பட்டன.

இப்பணியில் அக்காலப் பிரிவில் தலைசிறந்த பல முன்னணி அறிஞர்கள் காணப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். அவர்களுள் உதாரணமாக: அகீல் இப்னு அபீ தாலிப், அம்றுப்னு கவ்லா, அல் அக்ற.். இப்ன் ஹாபிஸ், மக்றமா பின் நவ்பல், ஜுபைர் பின் முத்இம் போன்றோர் ஜாஹிலிய்யக் காலம் தொடக்கம் இஸ்லாத்திலும் நீண்ட காலம் வாழ்ந்தோர் என்ற வகையில் அவர்களது வாய்மூல அறிவிப்புக்கள் வரவேற்புடையதாகக் காணப்பட்டன.

அத்துடன் இக்காலப் பகுதியில் அதாவது உமைய்யாக்கள் ஆட்சியின் ஆரம்பப் பகுதியில் வரலாற்றுத் தொகுப்பாளர்களாகப் பல தனி நபர்களும் காணப்பட்டனர். ஊதாரணமாக: அப்பான் பின் உஸ்மான், உர்வா பின் ஸுபைர், ஷர்ஹபீல் பின் ஹஸனா, ஸுஹ்ரீ போன்றோரைக் குறிப்பிடலாம்.

**இரண்டாம் கட்டம்:**

இக்காலப்பகுதி ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது, இப்பகுதியில் வாய்மூல வரலாற்றுச் செய்திகள் ஏனைய சிறு சிறு தொகுப்புக்களெல்லாம் நூலுருவாக்கல் நிலையை எட்டியிருந்தன. ஆயினும் அன்றைய வரலாற்றாளர்கள் நபி ஸல்லால்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வரலாறாகிய ஸீறாவிலேயே கூடுதல் கவனம் செலுத்தினர், அதனையடுத்து ஜாஹிலிய நிகழ்வுகள் பரம்பரைத் தொடர்கள் முன்னைய சமூகங்கள் பற்றிய செய்திகள் தனித் தனி தலைப்புக்களில் சேர்க்கப்பட்டு நூலாக்கம் பெற்றன ஆயினும் அவை பூரணத்துவம் பெற்றிருக்கவில்லை.

இக்காலப் பகுதியில் வரலாற்று நிகழ்வுகளில் ஒரு குறிப்பிட்ட பகுதியை உள்ளடக்கியதாக சிறு சிறு நூல்களே எழுதப்பட்டன. அவ்வாறான தொகுப்பாளர்களில் குறிப்பிடத்தக்கோராக: அபூ முக்னிப், அல் ஹைதம் பின் அதீ, அல் வாகிதீ, நஸ்ரிப்ன் மஸாஹிம், போன்றோர் காணப்படு கின்றனர்.

**மூன்றாம் கட்டம்:**

இக்காலப் பிரிவிலேயே இக்காலப்பிரிவிலேயே காலத்தை மையமாகக் கொண்டும், அடுத்தடுத்து வரும் தலைப்புக்களை ஒரே நூலில் ஒன்றுசேர்த்தல், மானிட வரலாற்றை ஒருங்கே தொகுத்தல் போன்ற அடிப்படைகள் தோற்றம் பெற்றன.

இக்காலத் தொகுப்புக்களின் சிறப்பம்சங்கள் இப்னு இஸ்ஹாகினால் எழுதப்பட்டிருக்கும் அஸ்ஸீறா அந்நபவிய்யா எனும் நூலில் பிரதிபலிப்பதைக் காணமுடியும். இந்நிலை மூன்றாம் நூற்றாண்டு வரை காணப்பட்டது. அதனையடுத்து வந்த காலப் பகுதியில் வரலாறு தனக்கான தனித்துவத்துடன் ஸ்திரமடைந்தது, இதனை chronology களில் காண முடியம் அவற்றுள் முக்கியத்துவமிக்கதாக தாரீகுத் தபரீ ஐக் குறிப்பிடலாம். இக்காலப்பிரிவு சிறப்புற்று விளங்கு வதற்கு கடதாசி கண்டுபிடிக்கப்பட்டமை முக்கிய பின்னணியாகும்.

இக்காலப் பிரிவின் முக்கிய நூற்களாக தபரீயுடன், அபூ ஹனீபா அத் தீனூரீ, அல் யஃகூபீ, இப்னு தய்பூர் போன்ரோரைக் குறிப்பிடலாம். இக்காலப் பகுதியிலேயே ஷாம், இராக், ஹிஜாஸ் போன்ற பகுதிகளில் வரலாற்றுக் கல்விக்கூடங்களும் நிர்மாணிக்கப்பட்டன.

## 1.3இஸ்லாமிய வரலாற்றின் சிறப்பம்சங்கள்

இஸ்லாமிய வரலாறு ஏனைய வரலாறுகள் போன்றல்லாது இறை வேதங்கள் விசுவாசிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதால் அது ஏனையவற்றிற் காணப்பட முடியாத பல்வேறு விசேட அம்சங்களைக் கொண்டுள்ளது. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

- இஸ்லாமிய வரலாறு நபிமார்களுடனும் றஸூல்மார்களுடனும் தொடர்புபட்டது: அதாவது முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்கள் நபியாகவே உலகுக்கு இறக்கப்பட்டமையும் அன்று தொடக்கம் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் வரையிலான அனைத்து நபிமார்களும் அவர்களை ஏற்றுக்கொண்டோரும் ஏகத்துவக் கொள்கையில் முரண்பாடு களற்றவர்களாகக் காணப்படுவதால் அவர்களது வரலாற்றின் தொடர்ச்சியே எமது வரலாறுமாகும். இது பற்றி அல் குர்ஆனும் நபி மொழிகளும் பல்வேறு இடங்களில் மிகத் தெளிவாகக் கருத்துரைக்கின்றன.
- இவ்வரலாறு பரந்துபட்டதாகும்: இவ்வரலாறு வெறுமனே மனித செயற்பாடுகளின் ஏதாவதொரு பக்கத்துடன் சுருங்கி விட்டதல்ல, மாறாக அது மனிதனோடு மட்டு மல்லாது உலகின் அனைத்து படைப்பினங்கள் பற்றிய விவரங்கள் மறுமை பற்றிய விபரங்கள், மனித வாழ்வின் அனைத்துத் துறைகள் பற்றிய செய்திகளையும் சுமந்திருக் கின்றது.
- இஸ்லாமிய வரலாறு துல்லியமானதும் ஒழுக்க விதிகளுக்குட்பட்டதுமாகும்: இஸ்லாமிய வரலாற்றிற் பேணப்படுவது போன்ற ஒழுங்கு விதிகளும், கட்டமைப்புக்களும் ஏனைய

வரலாறுகளிற் பேணப்படுவதில்லை. இஸ்லாமிய வரலாறு அல் குர்ஆனினதும் ஹதீதினதும் செல்வாக்குகளுக்கு உட்பட்டுள்ளமையால் அங்கு நம்பகத் தன்மை காக்கப்படுவதுடன் பெரும்பான்மையான செய்திகள் அறிவிப்பாளர்கள் தொடர்களுடன் பதியப்பட்டுள்ளன, உலகில் ஏனைய எந்த சமூகத்தை எடுத்து நோக்கினாலும் அவற்றின் வரலாற்றுச் செய்திகளுக்கு சரியானதோ அல்லது புனையப்பட்டாவது அறிவிப்பாளர் தொடர் காணப்படாது. இந்த வகையில் இஸ்லாமிய வரலாற்றைப் பொறுத்த வரையிலும் யுக முடிவு வரையிலும் இதனை ஆய்வு செய்யவோ உறுதிகாணவோ அனைவருக்கும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது காரணம் அதில் அறிவிப்பாளர் தொடர் பேணப்படுவதாகும்

- இஸ்லாமிய வரலாற்றிற் தொடராக புத்தாக்கமும் உயிர்ப்பூட்டலும் காணப்படுகின்றது. அது சில சமயங்களில் பின்னடைவைச் சந்தித்த போதிலும் விரைவில் தன்னை சுதாகரித்துக் கொண்டுள்ளதுடன் அவற்றிற்கான மாற்றீடுகளை முன்வைத்திருக்கிறது. ஆவ்வாறே மிக நுட்பமும், விரிவானதும், மிக மிக நீளமான பதிவேடுகளையும் கொண்ட சிறப்பு மிக்க வரலாறாக இஸ்லாமிய வரலாறு காணப்படுவது மறுக்க முடியாத ஒன்றாகும்.

**2. வரலாற்றுக் கட்டங்கள்:**

**2.1 நபி (ஸல்) அவர்களது காலம்:**

**நுபுவ்வத்திற்கு முன்னர்:**

இஸ்லாமிய வரலாற்றைப் பொறுத்த வரையிலும் அது பல்வேறு கட்டங்களைக் கடந்து வந்துள்ளது. ஒவ்வொரு காலப்பகுதியும் அவ்வப்போதைய நிகழ்வுகளுக்கேற்ப வித்தியாசங் களையும் சிறப்பம்சங்களையும் கொண்டிருப்பதனை வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும் போது தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். அந்த வகையில் இவ்வரலாற்றின் முதற் கட்டமாகிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்தை எடுத்து நோக்கும் போது, அதன் முதற் கட்டம் வேதங்களின் வழிகாட்டல்களிலிருந்து முற்றிலும் வெளியேறியிருந்த ஜாஹிலிய சமூகத்தின் மத்தியில் அமைந்து காணப்பட்டமையால், தனது பிறப்பு முதல் நுபுவ்வத் வழங்கப்படும் வரை பரீட்சைக் களமாகவும் ஆளுமை உருவாக்கமாகவுமே காணப்பட்டது.

தந்தையை வாழ்நாளில் ஒரு தடவையேனும் பார்த்திராத, பாலைப் பருவத்தில் தாயையும் இழந்து விட்ட அவர்களது வாழ்வு குடும்ப உறவினர்களின் பராமரிப்பிலேயே தங்கியிருந்தது. ஆயினும் பெற்றோரின் அரவணைப்பிலும் செல்வச் செழிப்பிலும் வளர்ந்தோரைப் பார்க்கிலும் பக்குவமானதும் பாராட்டுக்குரியதாகவுமே அவர்களது பண்பாடுகள் அமைந்திருந்தன. அதில் எதிர்காலத்தில் அவர்கள் மீது சுமத்தப்படவிருந்த உயரிய பணிக்காண பொருத்தப்பாடு மிகத் துல்லியமாக வெளிப்பட்டது.

இதுவே, அன்றைய நெறிதவறிய ஜாஹிலிய சமூகத்தின் மத்தியிற் கூட அவர்களது நடத்தைகளுக்கும் ஆலோசனைகளுக்கும் உயரிய ஸ்தானத்தையும் அங்கீகாரத்தையும் பெற்றுக் கொடுத்தது.

அனாதை என்ற வகையில் குடும்ப பாட்டனார், தந்தையின் சகோதரர்கள் போன்றோரின் பராமரிப்பில் வளர்ந்தமையால் தம்மைப் பராமரிப்போருக்கு சிரமம் கொடுக்கக் கூடாது என்ற ஆதங்கத்தால் சிறு பராயத்திலிருந்தே ஆடு மேய்த்தல் கூலித் தொழில்கள் மூலம் சம்பாதிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார்கள். ஆதலால் கல்வி கற்கும் வாய்ப்பினை இழந்து எழத வாசிக்கத் தெரியாதவராகவே வளர்ந்தார்கள். வாலிபத்தை அடைந்த வேளை பெரிய தந்தையுடன் இணைந்து நேர்மையான வணிகத்தில் ஈடுபாடு கொண்டார்கள். அதன் தொடர்ச்சியே சீமாட்டி கதீஜாவுடனான அவர்களது திருமண மாகும், இதனால் செல்வம் நிறைந்த ஒரு சூழலுக்கு மாறிய போதிலும் நபி (ஸல்) அவர்கள் அதனை சமூக மேம்பாட்டுக்கும் தமது உயரிய பண்பாடுகளுக்கும் மேலும் வலுச்சேர்ப்பதாகவே பயன்படுத்திக் கொண்டார்களே தவிர செருக்குக் கொள்ளவில்லை.

எவ்வித இயக்க செல்வாக்குகளோ கொள்கைத் தாக்கங்களோ அற்றவராக நாற்பது ஆண்டுகள் வரையிலும் நெறிபுறழா வாழ்க்கை முறையினைக் கடைப்பிடித்த அவர்கள் அக்கால மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவும், சொத்துக்களைப் பாதுகாக்க வும் தகுதியானவர் என பொதுசன அங்கீகாரம் பெற்றிருந்தார்கள்.

நபியாக தேர்ந்தெடுக்கப்படு முன்னரே அதற்கான அடையாளங்கள் அவர்களிடம் வெளிப்பட்ட வண்ணமிருந்தன. அது மட்டுமல்லாது முன்னைய வேதங்களைக் கற்றறிந் திருந்த பாதிரிமார் உட்பட ஏனையோரும் அவர்களது நடத்தைகள் அங்க அடையாளங் கள் ஊடாக அவர்களது விடயத்தில் அறிவுறுத்தல்களை வழங்கினார்கள், ஆதலால் நபியவர்கள குடும்பம் அவர்கள் மீது மிகுந்த அக்கறை செலுத்தியதுடன் அவர்களது பாதுகாப்பிலும் கவனம் செலுத்தியது.

இவ்வாறு சுமார் நாற்பது ஆண்டுகள் பல்வேறு கலாசார பண்பாட்டு சீர்கேடுகளை தம்கண்முன்னே கண்டும் அவைபற்றி கவலையும் வேதனையும் அடைவது மாட்டுமல்லாது தனிமையில் ஒதுங்கியிருந்து சீர்திருத்தம் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தர்கள் இந்நிலையிலேயே அவர்கள் அல்லாஹ்வினால் சர்வதேச சீர்திருத்தப் பணியாகிய இறுதித் தூதுத்துவத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

**நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்க்கை**

மேற்சொன்னவாறு நாற்பதாண்டுகளை மக்காவில் கழித்த நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராகப் பிரகடனம் செய்யப்பட்டதிலிருந்து அவர்களது வாழ்க்கை ஹிஜ்றத்தின் முன்னரான மக்கா வாழ்க்கை, ஹிஜ்றத்தின் பின்னரான மதீனாக் காலம் என முக்கியமான இரு கட்டங்களாக நோக்கப்படுகின்றது. இஸ்லாமிய வரலாற்றைப் பொறுத்த மட்டிலும் இவ்விரு

பிரிவுகளையும் நுட்பமாக அறிந்தும் விளங்கியும் கொள்வது உலகளாவிய முஸ்லிம் சமூகத்திற்கு மிகவும் இன்றியமையாததாகும்.

ஹிறாக் குகையில் முதன் முதலாக நுபுத்துவத்தைப் பிரகடனப்படுத்தும் செய்தி நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டது, அதனைத் தொடர்ந்து ஏகத்துவத்தை பகிரங்கப்படுத்தும் கட்டளைகள் அல்லாஹ்வினால் பிறப்பிக்கப்பட்டன. சற்றும் மனம் தளராது அசாதாரண தைரியத்துடன் அவர்களது உறவினர்கள் குடும்பத்தினர் அனைவரையும் ஒன்று திரட்டி தனக்கிருந்த சமூக அங்கீகாரத்தை உறுதிசெய்து கொண்டு அல்லாஹ்வின் தூதைப் பிரகடனம் செய்தார்கள்.

அன்றுவரை அந்த சமூகத்தினால் மனதாரப் புகழப்பட்டும் முதற் தரத்தில் உயர்த்தப்பட்டும் காணப்பட்ட அவர்களது சமூக வாழ்வு முற்றிலும் வேறுபட்டதொரு சூழ்நிலைக்குத் தள்ளப் பட்டது. போற்றியவர்கள் தூற்றவாரம்பித்தனர், பல்வேறு சந்தேகங்களுக்குள்ளானதுடன் யதார்த்தத்தினைப் புரிந்து கொள்ளாது அவரவர் கற்பனைக்கேற்ப வினாவெளுப்பினர். இவை தவிர தமது கோத்திரத்தினுள் ஏகபோக உரிமை பெற்றிருந்த அன்றைய தலைவர்கள் நபி (ஸல்) அவர்களின் பிரச்சாரத்தினை தம்மை எதிர்நோக்கும் முக்கிய சவாலாகக் கருதி களமிறங்கினர்.

இந்நிலை நபி (ஸல்) அவர்களுக்கும், அவர்களை எவ்வித மாற்றுக் கேள்விகளுக்கும் உட்படுத்தாது முதற்கட்டத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சிறு தொகை முஸ்லிம் களுக்கும் அளவிட முடியா துயரங்களுக்கு வழிகோலியது.

மனம்போன போக்கில் இன்பம் கண்டு கொண்டிருந்த மக்களுக்குக் கட்டுப்பாடான ஆனால் சுபீட்சம் நிறைந்த வாழ்க்கை நெறியினை விளங்கிக் கொள்வதும் ஜீரணிப்பதும் கடினமாகத் தோன்றியது. அவையனைத்திற்கும் மேலாக அவர்கள் உயிராக மதித்து வந்த விக்கிரகங் களை நிராகரிப்பதை அவர்களால் நினைத்துப் பார்க்கவே முடியாமலிருந்தது.

இதன் எதிர் விளைவு யாரை தமது நம்பிக்கை நட்சத்திரமாக ஏற்றிருந்தனரோ அவரது புத்தியில் சந்தேகம் தோன்றியது. ஆன்பிற்குப் பதிலாக அடாவடித்தனங்களைக் கட்விழ்த்து விட்டனர். நிலைமை மென்மேலும் மோசமடைந்தே சென்றது. நேரடித் தாக்குதல்களை நடாத்தியது மட்டுமல்லாது பொருளாதாரத் தடை சமூகத் தடையெனப் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி மாற்றங்காண முற்பட்டனர். ஆயினும் நபி (ஸல்) அவர்களது பிரச்சாரம் வஹியை மையமாகக் கொண்டது என்ற வகையில் அதில் எவ்வித மாற்றமும் இடம் பெறவில்லை மாறாக மேலும் திடம் பொருந்தியதாகவே மாறிக் கொண்டிருந்தது.

இதனிடையில் நிலைமையில் ஓரளவேனும் மாற்றத்தை எதிர்பார்த்து நபி (ஸல்) அவர்கள் தாயிப் சென்று தனது பிரச்சாரத்திற்கு சாதகமான நிலையினைத் தேடினார்கள் அதுவும் வெற்றியளிக்கவில்லை, இந்நிலையில் ஸஹாபாக்களை இருமுறை அபீஸீனியாவிற்கு அனுப்பி வைத்தார்கள். இருந்த போதிலும் திருப்பியான நிலை தோன்றவில்லை, இவையனைத்திற்கும்

மத்தியிலும் பெருமானார் (ஸல்) அவர்களின் பிரச்சாரம் வெற்றி நோக்கியே பயணித்துக் கொண்டிருந்தது, நாள்தோறும் புதிய புதிய அங்கத்தவர்கள் நபி (ஸல்) தலைமையின் கீழான இஸ்லாமிய இயக்கத்தில் இணைந்து கொண்டேயிருந்தனர். எத்தகைய நிலையிலும் இஸ்லாத்தின் எதிரிகளான மக்கத்துக் குறைஷிகள் புதிய பிரச்சாரத்தைத் தான் ஏற்றுக் கொள்ள மறுத்தார்களே தவிர நபி (ஸல்) அவர்களின் சமூக வாழ்வில் அவர்களை பொய்யர் என்றோ நாணயமற்றவர் என்றோ கூற முற்படவுமில்லை அதனை ஏற்றுக் கொள்ளவும் அவர்கள் தயாராயிருக்கவில்லை. அதனை அவர்கள் உள்ளூரில் மட்டுமல்ல பிற நாட்டுப் பிரதிநிதிகளிடமும் கூட உறுதி செய்திருந்தனர். இது நபி (ஸல்) அவர்களது ஆளுமைக்குக் கிடைத்த மாபெரும் அங்கீகாரம் என்றால் அது மிகையல்ல.

இவ்வாறு சுமார் பதின்மூன்று ஆண்டுகள் கழிந்திருந்தன நபியவர்களும் தனது 53ம் வயதை எட்டியிருந்தார்கள். இந்நிலையிலேயே இஸ்லாமிய வரலாற்றில் மிக முக்கியமான திருப்பு முனையான ஓர் அத்தியாயம் துவக்கப்பட்டது.

## நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கை

இஸ்லாமிய வரலாற்றில் அதி முக்கிய இடம் பிடித்தக் கொண்ட இந்நிகழ்வு சுமார் மூன்று வருட காலத்திற்கும் கூடுதலாக மிகத் துல்லியமாகத் திட்டமிடப்பட்ட பின்னரே மேற்கொள்ளப் பட்டது, இதுவே இஸ்லாமிய அரசொன்றின் தோற்றத்தின் முதற் கட்டமுமாகும்.

ஹிஜ்றத்திற்கு முந்திய இரு ஆண்டுகளும் ஹஜ்ஜுக்கு வருகை தந்திருந்த மதீனத்துக் குழுக்களுடன் மிக அந்தரங்கமான சந்திப்புக்களை ஏற்படுத்தி அவர்களது உள்ளார்ந்த நிலைப்பாடுகளில் திருப்தியான பதில் கிடைக்கவே தமது பிரதிநிதியும் இஸ்லாத்தின் முதல் தூதுவருமான முஸ்அப் பின் உமைர் (றழி) அவர்களை மதீனாவுக்கு அனுப்பி இஸ்லாத்தை ஏற்றிருந்தவர்களுக்கு அல் குர்ஆனை கற்பிக்கவும், அங்கு இஸ்லாமியப் பிரச்சாரத்தைக் கண்காணிக்கவும் அனுப்பி வைத்தார்கள். அவர் மிகக் குறுகிய காலப் பகுதிக்குள்ளேயே பெரும் எண்ணிக்கையிலானோரை இஸ்லாத்தில் இணைத்ததுடன் மிகத் திருப்திகரமான களநிலையினை உருவாக்கினார்.

இவ்வாறு சாதகமான சமிக்கைகள் கிடைக்கப் பெறவே இறுதியாக, ஹிஜ்றத்திற்கு அண்மித்த காலப் பகுதியில் மதீனாவிலிருந்து வருகை தந்திருந்த முக்கியஸ்தர்களுடன் பைஅதுல் அகபா-1, பைஅதுல் அகபா-2 எனும் இரு பாதுகாப்பு ஒப்பந்தமும் உறுதி மொழியும் பெற்றுக் கொண்டு புறப்படுவதற்கு அல்லாஹ்வுடைய அனுமதியை எதிர்பார்த்திருந்தார்கள். சில மாதங்கள் கழிந்து விட்ட பின்னர் ஹிஜ்றத்திற்கான அனுமதியும் கிடைக்கப் பெற்றது. எனவே அவசர அவசரமாகத் தான் பிறந்து வளர்ந்து, சுமார் 53 ஆண்டுகள் வாழ்ந்த மண்ணிலிருந்து உடைமைகள், உளமாற நேசிக்கும் அல்லாஹ்வின் ஆலயமாகிய க.்.பா, தனது உற்றார் உறவினர்கள் அனைத்தையும் நிர்ப்பந்தமாக விட்டுவிட்டு இரவோடிரவாக உயிராபத்துக்களும்

பல்வேறு சிரமங்களும் நிறைந்த பயணத்தை பல நாட்கள் தொடர்ந்து, எவ்வித பரீட்சயமோ, இரத்த உறவுகளோ இல்லாத ஒரு புதிய தேசத்தினுட் பிரவேசித்தார்கள் நபி (ஸல்) அவர்கள்.

இத்தகைய விரைவானதும் பாரியதுமான மாற்றங்கள் மதீனத்து சமூகத்தில் குறுகிய கால இடைவெளிக்கும் இடம்பெறுவதற்கு அன்று மதீனாவிற் காணப்பட்ட அவ்ஸ் கஸ்றஜ் உள்ளக முரண்பாடுகள், அவற்றை அடிக்கடி தூண்டி விடும் யூதர்களின் சதிமுயற்சிகள் இவற்றினைக் களைவதற்காக மதீனத்து மக்கள் தேடிக்கொண்டிருந்த ஏக தலைமைத்துவம் நபி (ஸல்) அவர்கமூடாக கிடைக்கப்பெறும் எனும் நம்பிக்கை, வரலாறு நெடுகிலும் யூதர்களால் விடுக்கப் பட்டு வந்த அச்சுறுத்தலை இல்லாதொழிக்க அவர்களை முந்திக் கொண்டு நபியவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளல், மேலும் நபி (ஸல்) அவர்கள் போதித்த ஏகத்துவக் கொள்கையினை விளங்கிக் கொள்ளும் பக்குவம் மதீனாமக்களிடம் அதிகம் காணப்பட்டமை, மக்காவில் நபியவர்களுக்கிருந்த குலப் போட்டி நிலை அங்கு தலைதூக்க வேண்டிய பின்னணி யில்லாமை போன்ற பல காரணிகள் மதீனா சூழலை ஓரளவு இலகுவாக மாற்றியமைக்கக் கூடிய சாதக நிலையினை ஏற்படுத்தியிருந்தன என்பது அவதானிக்கப்பட வேண்டியதாகும்.

பல்வேறு எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அகதிகளாக புதிய பிரதேசத்திற் குடியேறிய போதிலும், இயல்பு வாழ்வினைத் தொடர பல முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை அவர்களுக்குக் காணப்பட்டது. அதாவது மதீனத்து அறபு மக்களைப் பொறுத்த வரையில் சாதகமான நிலை காணப்பட்ட பொழுதிலும், அன்றைய மதீனாவின் பொருளாதாரப் பின்னணியில் யூதர்களின் செல்வாக்கு அதிகமாகவும் மதீனத்துப் பிரபல கோத்திரங்கள் திட்டமிட்டுத் துண்டாடப்பட்டும் பொருளாதார வளம் குன்றியும் காணப்பட்டமையாலும் முஹாஜிர் களான மக்கா வாசிகள் தங்களது அனைத்து உடமைகளையும் இழந்து வெற்றுக் கரங்களுடனேயே மதீனா வந்தடைந்தமையால் மதீனாவின் இஸ்லாமிய சமூகம் தங்களது சக்திக்கப்பாலும் பல சுமைகளைச் சுமக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை காணப்பட்டது. ஆயினும் கூட எவ்வித தயக்கமுமின்றி அவையனைத்தையும் எதிர்கொள்ள அவர்கள் துணிந்து நின்றனர்.

எனவே, அன்றைய சூழ்நிலையில் நபி (ஸல்) அவர்களது சமூக உருவாக்கப் பணியின் முன்னால் பலமிக்க சவால்கள் பல காணப்பட்டன.

1. புதிய பிரதேசத்தில் இஸ்லாத்தின் இருப்பைப் பாதுகாப்பது
2. முஹாஜிர்களது இயல்புகளுக்கும் அன்ஸார்களது இயல்புகளுக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்படாத வகையில் உறவுகளை ஏற்படுத்துவது
3. முஸ்லிம்களைத் துரத்திப் பிடிக்கும் வக்கிரப் போக்கினைக் கடைப்பிடித்துக் கொண்டிருந்த மக்கத்துக் குறைஷிகளை எதிர்கொள்வது
4. நபி (ஸல்) அவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் எதிரான எல்லைகடந்த காழ்ப்புணர்வுடன் காணப்பட்ட மதீனத்து யூதர்களும் அவர்களது பொருளாதார செல்வாக்கும்
5. முஸ்லிம்களை ஒடுக்கிவிட திரைமறைவில் திட்டம் தீட்டும் நயவஞ்சகர்களின் சதி முயற்சிகள்

6. சிறுபான்மையான முஸ்லிம் சமூகத்தைப் பீடித்திருந்த பொருளாதாரப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு சவால்களை முறியடித்து வெற்றிகரமான ஒரு சமூக உருவாக்கத்தின் அடித்தளத்தினை இடுவதற்கான பாரிய சுமையொன்றினைத் தாங்கிக் கொண்டார்கள் நபி (ஸல்) அவர்கள்.

இப்பணியின் முதற்கட்டமாக முஹாஜிர்கள் மத்தியிலுள்ள கூட்டுப் பொறுப்புக்களை உணர்த்தி அவாக்ளையும் அன்ஸார்களையும் அவரவர் நிலைமைக்குப் பொருத்தமான வகையில் சகோதர பிணைப்பினை ஏற்படுத்தி அவர்கள் மத்தியில் இடைவெளிகளைக் களைந்து அன்யோன்ய உறவினை ஏற்படுத்தினார்கள. அத்துடன் மதீனாவாசிகளான அவ்ஸ் கஸ்றஜ் கிளையினர் மத்தியில் நிலவிய முரண்பாடுகளை நீக்கி பரஸ்பர உறவினை ஏற்படுத்தினார்கள், அடுத்து மதீனாவின் உள்ளிருந்து பல சதித்திட்டங்களை தீட்டி வந்த யூதர்களையும் தனித்தியங்க முடியா வண்ணம் மதீனாவின் ஒருங்கிணைக்கப்பட்ட சமூக அமைப்பினுள் இணைத்துக் கொண்டார்கள். இவையனைத்தையும் வெறுமனே வாய்ப்பேச்சுக்களாக விட்டு விடாது ஒப்பந்தங்களாகவும் உறுதி மொழிகளாகவும் நடைமுறைப்படுத்தினார்கள். இவற்றில் யூதர்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட மதீனா சாசனம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும். அத்துடன் பல்லின சமூகங்கள் மத்தியில் ஓர் இஸ்லாமிய அரசின் சாத்தியத்திற்கு சிறந்த முன்னுதாரணமாகும்.

தனது சீரிய நடைமுறைகளால் எல்லோராலும் கவரப்பட்டும் மதிக்கப்பட்டும் வந்த நபி (ஸல்) அவர்கள் ஓர் ஆன்மீகத் தலைவராக மட்டுமல்லாது ஓர் அரசின் தலைவராகவும் இதன் மூலம் பிரகடனம் செய்யப்பட்டார்கள். மதீனாவை வந்தடைந்ததும் முதற்கட்டப் பணிகளுள் ஒன்றாக தனது சொந்தப் பணத்திலிருந்து மஸ்ஜிதுந் நபவீ கட்டப்பட்டிருக்கும் நிலத்தினை கிரயமாகப் பெற்று அங்கு தொழுகையுடன் கூடிய பல்நோக்கு மையம் ஒன்றினை உருவாக்கினார்கள். அதில் ஐவேளைத் தொழுகை உட்பட அனைத்துத் தொழுகைகளும் நிறைவேற்றப்பட்டதுடன் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து நீதி செலுத்தும் நீதிமன்றமாகவும், இஸ்லாமிய அரசின் பாராளுமன்றமாகவும், தூதுக்குழுக்களை வரவேற்கும் மண்டபமாகவும், கல்விக்கூடமாக எனப் பல்வேறு சமூகக் கடமைகளை முன்நின்று நிறைவேற்றும் மையமாகவும் அது இயங்கியது. எனவே இவ்வகைக் கட்டமைப்புக்களை உருவாக்கியதன் மூலம் மதீனாவில் வசித்த பத்தாண்டுப் பகுதிலும் தமக்கு முழுமையாகக் கட்டுப்பட்டொழுகும் ஒரு சீரிய சமுதாயத்தை அவர்களால் உருவாக்க முடிந்தது.

அத்துடன் மதீனாவில் எல்லைக்குள்ளும் அப்பாலும் பல போர்க்களங்களை சந்திக்க நேரிட்ட பொழுதிலும் கூட எதிரிகளால் தோற்கடிக்கப்பட முடியாத ஒரு சக்தியையும் ஒருமைப்பாட்டினை யும் தமது பிரஜைகளிடத்தில் தோற்றுவித்திருந்தார்கள். அதுமட்டுமல்லாது எந்த சமூகம் தமது பலத்தாலும் அத்துமீறல்களாலும் அன்றைய சிறுபான்மை முஸ்லிம்களை அவர்களது சொந்த மண்ணில் வாழவிடாது புலம்பெயர நிர்ப்பந்தித்ததோ அதே சமூகம் தலைகுனிந்து காலடியில் விழும் நிலைக்கு இவர்களது ஆள்புலம் பலம் பெற்றிருந்தது.

அன்றைய உலகின் வல்லரசுகளாகக் காணப்பட்ட ரோம, பாரசீக வல்லரசுகள் கூட தமது உன்னிப்பான அவதானத்தை இவ்வரசின் பக்கம் செலுத்தவும், இதனை இல்லாதொழிக்கவும் திட்டமிடும் அளவு இஸ்லாமிய அரசு எழுச்சி பெற்றிருந்தது. உள்ளகக் கட்டுக்கோப்புகளில் பெருமளவு வெற்றி பெற்றுவிட்ட நபி (ஸல்) அவர்கள் அயல் நாட்டு உறவுகள், சர்வதேச உறவுகள் போன்றவற்றிற்கும் அடிப்படைகளை உருவாக்கியதுடன் தூதுவர்களளையும் அனுப்பினார்கள். உள்நாட்டில் போராடிப் பயிற்சி பெற்றிருந்த போராளிகளை அயல்நாட்டு அச்சுறுத்தல்களை இல்லாதொழிப்பதற்காக தயார் செய்தார்கள். இதன் மூலம் இஸ்லாமிய அரசு எத்தகைய உள்நாட்டு வெளிநாட்டு அச்சுறுத்தல்களையும் சமாளிக்கும் ஆற்றல் பெற்றுள்ளமையைப் அன்றைய உலகுக்குப் புலப்படுத்தியது.

ஓர் உன்னத சமுதாயத்தை தனது வாழ்நாளிலேயே உருவாக்கி மனநிம்மதியடைந்த பெருமானார் (ஸல்) அவர்கள் தனக்குப் பின்னரும் அச்சமூகம் ஒற்றுமையும், பலமிக்கதாகவும் திகழ வேண்டுமென்பதற்காக தேவையான அனைத்துப் பயிற்சிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கியதுடன் தனக்குப் பின்னால் சமய அரசியல் பொறுப்பக்களைச் சுமக்கும் ஆற்றல் பெற்ற பலரை உருவாக்கியதுடன் தனது பிரதிநிதியாக அடுத்துவரத் தகுதியானவரை நியமிக்காத போதிலும் தேவையான அனைத்து சைகைகளையும் செய்து விட்டே இவ்வுலகைப் பிரிந்தார்கள்.

## 2.2 குலபாஉர் ராஷிதூன்கள் காலம்

இஸ்லாமிய வரலாற்று நிகழ்வுகளில் நபி (ஸல்) அவர்கள் காலத்திற்கு அடுத்து மிக முக்கியத் துவம் பெறுவது குலபாஉர் ராஷிதூன்கள் காலமாகும். ஏனெனில் வஹீயின் நிழலில் தமது அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தெளிவுமிக்கதும், உறுதியானதும், உடனடியானதுமான தீர்வு களைப் பெற்றுக் கொண்டிருந்த ஒரு சமூகம் வஹீ பூர்த்தி செய்யப்பட்டதுடன் தமது தலைவரையும் இழந்து விட்ட நிலையில், பல்வேறு சவால்களை சமாளித்து ஸ்திரம் நோக்கிப் பயணிக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. எனவே இக்கட்டத்தில் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்வும் வரலாற்று முக்கியத்துவமிக்கதாகக் காணப்பட்டது.

**கலீபாக்கள் தெரிவு முறைகள்:**

கலீபாக்கள் தெரிவுகள் எவ்வாறு இடம் பெற்றன என்பதனை நோக்கு முன்னர், இஸ்லாத்தின் பார்வையில் கிலாபத் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது, அது எவ்வாறான விடயங்களை உள்ளடக்கியிருக்கிறது, கலீபாவாகத் தெரிவுசெய்யப்படுபவரிடம் காணப்பட வேண்டிய தகைமை கள், கலீபாவைத் தெரிவு செய்யும் உரித்துடையோர் யார்? கலீபாவின் பணிகள் என்ன? என்பன போன்ற விடயங்களை அறிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

**இஸ்லாமிய கிலாபத் கோட்பாடுகள்:**

கிலாபத், இமாமத், இமாறத், எனப் பல சொற்பிரயோகங்கள் இஸ்லாமிய அரசியற் கோட்பாட்டில் தலைமைத்துவத்தை சுட்டிக் காட்டப் பயன்படுத்தப்படுகின்றன. ஆயினும் அல்குர்ஆன் பல இடங்களில் இது பற்றிப் பிரஸ்தாபிக்கும் போது கலீபா எனும் பதத்தினை அதிகம் பயன்படுத்தியுள்ளதை (ஸுறா பகறா 30, ஸுறா ஸாத்: 26, ஸுறா நூர்:55) போன்ற வற்றிலும், ஹதீஸ்கள் ஸஹாபாக்களின் உபயோகங்கள் போன்றவற்றிலும் அவதானிக்க முடியும்.

தலைமைத்துவம், அதனுடன் தொடர்புபட்ட விடயங்களில் இஸ்லாம் முக்கிய கவனம் செலுத்து கின்றது, முஸ்லிம் சமூகம் எந்நிலையிலும் தலைவர் இன்றி வாழ்வதை அது அனுமதிக்க வில்லை. ஆகக் குறைந்த பட்சம் மூவர் இருப்பினும் கூட தமக்குள் ஒருவரை தலைவராக்கிக் கொள்ளும்படி அது வலியுறுத்துகின்றது. அது மட்டுமல்லாது அங்கீகாரம் பெற்ற ஒரு தலைவர் பாவகாரியங்களில் ஈடுபட்டாலும் கூட ஏகத்துவத்தில் இருக்கும் வரை அவருக்குக் கட்டுப்பட்டு நடக்குமாறும் அறிவுறுத்துகின்றது. ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களை விளித்து: நீங்கள் தலைவரில்லாத ஒரு சமூகத்திடம் செல்ல நேர்ந்தால் அங்கு தங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என அறிவுரை கூறியிருக்கின்றார்கள். இவ்வாறு தலைமைத்துவம் பல்வேறு வகையில் வலியுறுத்தப்படுவதனை அவதானிக்கலாம்.

இஸ்லாமிய அரசியற் கோட்பாட்டில் நபி (ஸல்) அவர்களால் வழங்கப்பட்ட உறுதியானதும் நேர்த்தியானதுமான தலைமைத்துவத்தின் பின் அவ்வெற்றிடத்தை நிரப்பும் பணி உத்தம ஸஹாபாக்களால் கலீபா அல்லது கலீபது றஸுலில்லாஹ் எனும் பெயருடன் பரிணாமம் பெறுகின்றது. இவ்வாறு தெரிவுசெய்யப்படும் கலீபா தனது அடிப்படைப் பணிகளாக இஸ்லாத்தைப் பாதுகாத்து அதனைப் உலகெல்லாம் பரவச் செய்வதுடன், உலக விவகாரங்களை நிர்வகிக்கவும் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது.

**கலீபாக்களிடம் காணப்படவேண்டிய தகைமைகள்**

இஸ்லாமிய அரசியல் ஒரு கலீபா எவ்வாறு இருக்கவேண்டும் அவரிடம் எத்தகைய சிறப்பம்சங்கள் காணப்படவேண்டும் போன்ற நிபந்தனைளை மிகத் தெளிவாக வரையறை செய்கின்றது. அதனடிப்படையில் நோக்கும் போது கலீபாவாகத் தெரிவு செய்யப்படுபவரிடம் பின்வரும் அடிப்படைத் தகைமைகளை வலியுறுத்துகின்றது:-

1. முஸ்லிம்களின் கலீபா கட்டாயம் முஸ்லிமாகவே இருக்கவேண்டும் என வலியுறுத்துகின்றது அல்-குர்ஆன்: (4:141).
2. கலீபா ஆணாக இருக்கவேண்டும் என்பது இன்னுமொரு நிபந்தனையாகும்
3. கலீபா பருவ வயதை அடைந்தவராக இருக்கவேண்டும்
4. தெளிந்த புத்தியுடையவராய் இருத்தல் வேண்டும்

5. நீதி தவறாதவராய் இருக்கவேண்டும் கெட்ட பண்புள்ளவர்கள் இப்பதவிக்கு சிபார்சு செய்யப்படலாகாது
6. பூரண சுதந்திரம் உடையவராய் இருத்தல் வேண்டும்
7. தும்மீது சுமத்தப்படும் பொறுப்பினை செவ்வனே நிறைவேற்றும் தகைமையும் பொறுமையுமுடையவராய் இருத்தல் வேண்டும்

இவ்வாறு மேற்கூறப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யும் தகுதி பெற்ற ஒருவரே கலீபாவாகப் பதவி வகிக்கத் உரித்துடையவராகிறார். இவைதவிர இன்னும் சில விடயங்கள் மேலதிக தகைமைகளாக முன்வைக்கப்பட்டாலும் அவை அடிப்படைத் தகைமைகளுள் அடங்காது, மாறாக விசேட தகைமைகளாகவே கருதப்படும்.

**கலீபாத் தெரிவுக் குழுவும் (ஷுறா சபை) அங்கத்தினர்களின் தகைமைகளும்**

இஸ்லாம் தலைமைத்துவத்தை கட்டாயத் தேவையாக கடமையாக்கிருப்பதனால் அதனை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் யார்மூலம் அவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனும் ஒழுங்களையும் வரையறுக்காமல் விட்டுவிடவில்லை. அந்த வகையில் இஸ்லாத்தின் வழிகாட்டலை ஸஹாபாக்கள் நடைமுறைப்படுத்திய பல்வேறு முன்னுதாரணங்கள் இஸ்லாமிய அரசியல் வரலாற்றிற் பதிவாகியுள்ளன.

மஜ்லிஸுஸ் ஸுறா எனும் மக்களவையை முதன்முதலில் அரசியல் விவகாரங்களில் அறிமுகம் செய்து வைத்த நபி (ஸல்) அவர்கள் அச்சபையில் அங்கம் வகிக்கும் தகைமையுடையோர் யார் என்பதையும் தமது நடைறைகமூடாக அடையாளப்படுத்தியிருக்கிறார்கள்.

‘‘அஹ்லுல் ஹல் வல் அக்த்’’ எனப்படும் சமூக அந்தஸ்தும் மக்கள் அங்கீகாரமும் பெற்ற முன்னோடிகள் நபி (ஸல்) அவர்கள் காலத்திலிருந்தே அனைத்து சமூக பொது விவகாரங்களிலும் நபியவர்களால் ஆலோசனை கேட்கப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறானவர்கள் கூறும் ஆலோசனைகள் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் அங்கீகாரம் பெற்றுள்ளமை அவர்களுக்கு காணப்பட்ட அந்தஸ்தினை தெளிவு படுத்துகின்றது. ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் அபூபக்ர், உமர் (றழி) ஆகிய இருவர் பற்றியும் குறிப்பிடும் போது அவ்விருவரும் எனது கண்களையும் காதுகளையும் போன்றவர்கள் எனக் கூறினார்கள். ஏனெனில் இவ்விருவரும் நபி (ஸல்) அவர்களுடனேயே தமது பெரும் பகுதியா காலத்தை செலவிட்டு இஸ்லாமிய அரசை வழிநடாத்துவதில் துணைசெய்தனர் இவர்கள் மட்டுமல்லாது உஸ்மான், அலீ, அபூஉபைதா (றழி) போன்ற பல முன்னணி ஸஹாபாக்கள் இத்தகைய முக்கிய பங்களிப்புக்களை செய்து வந்தனர்.

நபி (ஸல்) அவர்களின் மறைவுக்குப் பின்னால் கலீபாக்களும் அந்நடைமுறையை மிக ஆணித்தராமாகப் பின்பற்றியதோடு மஜ்லிஸுஸ் ஸுறாவுக்கான தனித்துவமான வடிவத்தினையும் கொடுத்தார்கள்.

இச்சபையில் அங்கத்துவம் வகித்தவர்கள் அன்றைய சமூகத்தின் மத்தியில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாகவே காணப்பட்டனர் எனவே அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங் கள் எவ்வித முரண்பாடுகளுமின்றி அனைத்துப் பிரஜைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

**கலீபாக்களின் அதிகாரங்களும் கடமைகளும்**

சிரேஷ்ட பிரஜைகள் அல்லது சமூக அங்கீகாரம் பெற்ற உயர்மட்டக் குழுவினரின் ஆலோசனைகள் சிபாரிசுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் முஸ்லிம் தலைவருக்கு பல உரிமைகளையும் அதேபோல் கடமைகளையும் இஸ்லாமிய அரசியற் கோட்பாடு வரையறை செய்துள்ளது.

இஸ்லாமிய வழிகாட்டலின் அடிப்படையில் ஒரு கலீபா தெரிவு செய்யப்பட்டு விட்டால் அவரை ஏற்று அனைத்து வயது வந்த பிரஜைகளும் அவருக்கு விசுவாசப்பிரமாணம் செய்ய வேண்டும் அத்துடன் அடுத்த கணமே அவரது நிர்வாகத்திற்கு கட்டுப்பட்டு ஒழுக வேண்டும். கலீபாவுக்கு எவ்வகையிலும் மாறு செய்யக்கூடாது, ஏனெனில் அது பற்றி இஸ்லாம் மிகக் கடுமையாக வலியுறுத்தியுள்ளது, அதாவது எவனாவது கலீபாவுக்கு முரண்பட்ட நிலையில் மரணிக் கின்றாரோ அவர் அறியாமைக் கால மரணங்களில் ஒரு வகையிலேயே மரணிக்கிறார் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே கலீபாவுக்கு விசுவாசமாய் அவரது வழிகாட்டல்களுக்கும் செவிமடுப்பது மக்களால் கலீபாவுக்கு வழங்கப்படவேண்டிய உரிமைகளாகும்.

‘‘உலகை நிர்வகிப்பதும் தீனைப் பாதுகாப்பதும்’’ எனும் வாசகத்தினூடே மிகச் சுருக்கமாக விளக்கப்பட்டிருக்கும் கலீபாவின் அடிப்படைக் கடமைகளாக தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள அனைத்துப் பிரஜைகளதும் உணவு, உடை, உறையுள் ஆகிய அனைத்தும் உறுதி செய்யப் படல் வேண்டும். அதே போல் பூமியில் இறைகட்டளைகளும் வழிகாட்டல்களும் முடிந்தவரை பூரணமாக அமுல்படுத்தப்படல் வேண்டும், இவற்றை நடைமுறைப்படுத்தலில் ஒரு கலீபா தோல்வி கண்டால் அவர் தொடர்ந்தும் அப்பதவியில் நீடிப்பது பற்றி ஷூறா சபை மீள் பரிசீலனை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

**குலபாஉர் றாஷிதூன்களின் தெரிவு முறைகள்**

நபி (ஸல்) அவர்கள், தனக்குப் பின்னால் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்கிவிட்ட நிலையிலேயே தனது மறுமைப் பயணத்தினுட் பிரவேசித்தார்கள். ஸஹாபாக் களைப் பொறுத்த வரையிலும் சடுதியாக நிகழ்ந்து முடிந்த நபி (ஸல்) அவர்களின் மறைவு பேரதிர்ச்சியையும் தாங்கொணாத் துயரினையும் ஏற்படுத்தியிருந்தது. அதிலிருந்து விடுபட்டு இயல்பு நிலைக்கு மீள நீண்டகால அவகாசம் அவர்களுக்குத் தேவையாயிருந்தது. ஆயினும் மறுபக்கத்தில் இஸ்லாத்தை எவ்வாறாயினும் ஒழித்துக் கட்டிவிடலாம் எனும் நப்பாசை கொண்டிருந்த பலம் பொருந்திய எதிரிகளின் நகர்வுகளும், இஸ்லாமிய அரசின் கட்டுப்பாட்டின்

கீழ் இருந்தவர்களின் கிளர்ச்சிகளும், ஏனைய பல சவால்களும் நிலைமையைத் மிகத் துரிதமாகவும் கச்சிதமாகவும் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தினை அவர்களுக்கு ஏற்படுத்தின.

எனவே இறைவேதத்தையும் விசுவாசிகளையும் பாதுகாத்து நபியவர்கள் விட்டுச்சென்ற இடத்திலிருந்து அவர்களை வழிநடாத்திச் செல்லும் பாரிய பணியை அவர்களின் பாசறையிற் பயிற்சி பெற்ற உத்தமத் தோழர்கள் தம் தோள்களிற் சுமந்து கொண்டனர். முன்னாலுள்ள பொறுப்புக்களை தெளிவாக அடையாளங்கண்டு, அதனைச் சரிவர நிறைவேற்ற அனைத்தை யும் அர்ப்பணித்தனர். அவர்களில் முன்னணி வகிப்பவர்கள் இந்த குலபாஉர் றாஷிதூன்களே என்பது வரலாற்று உண்மையாகும்.

இந்த நேர்வழிபெற்ற கலீபாக்கள் நால்வரும் சுமார் முப்பது வருடங்கள் இஸ்லாமிய உலகை நிர்வகித்து அதனை விரிவுபடுத்தியது மட்டுமல்லாது ஸ்தீரணப்படுத்துவதிலும் அளப்பரிய பங்களிப்பினை வழங்கினார்கள். இந்நால்வருமே நபி (ஸல்) அவர்களின் நம்பிக்கையைப் பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். இவர்கள் கிலாபத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட வழிமுறைமைகள் இஸ்லாமிய அரசியற் கோட்பாட்டில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

1. முதலாவது வழிமுறையாகிய கலீபா அபூபக்ர் ஸித்தீக் (றழி) அவர்களின் தெரிவினை எடுத்து நோக்கும் போது: அதனை ''நேரடியான மக்கள் தெரிவு முறை'' எனக் கொள்ளலாம்.

   நபி (ஸல்) அவர்கள் தமக்குப் பின்னால் ஓர் ஆட்சியாளரை நியமிக்காத போதிலும் அபூபக்ர் (றழி) அவர்களே அதற்குப் பொருத்தமானவர் என்பதை பல்வேறு விடயங்கள் ஊடாக உணர்த்தி விட்டே சென்றார்கள், அத்துடன் ஸகீபது பனீ ஸாஇதாவில் அன்ஸார்கள், முஹாஜிர்கள் மத்தியில் இடம்பெற்ற கருத்துப் பரிமாறல்களும் அபூபக்ர் (றழி) அவர்கள் அனைத்து ஸஹாபாக்கள் மத்தியிலும் அதிவிசேடமும் ஏக அங்கீகார மும் பெற்றிருந்தார்கள் என்பதற்கு சிறந்த சான்றுகளாகும்.

   நபியவர்கள் வபாத்தனதினமே தலைத்துவ இடைவெளியை அபாயத்தினை உணர்ந்த அன்ஸார்கள் ஸகீபது பனீ ஸாஇதாவில் ஒன்று கூடினர். இவ்வாறு அன்ஸார்கள் அவசரம் காட்டியமைக்கு அவர்கள் மத்தியில் காணப்பட்ட அவ்ஸ் கஸ்றஜ் கோத்திர முரண்பாடுகளும் நபியவர்களின் வருகையின் பின்னர் கிடைக்கப்பற்ற ஏக தலைமைத்து வத்தின் சுபீட்சங்கள் ஆகியவை முக்கிய காரணிகளாகும்.

   ஆயினும், விடயமறிந்து அவசர அவசரமாக அங்கு பிரசன்னமான முஹாஜிர்களதும் முழு முஸ்லிம்களதும் முக்கியஸ்தர்களான அபூபக்ர், உமர், அபூஉபைதா (றழி) ஆகியவர்கள் நிலைமையைத் தெளிவுபடுத்திப் பேசியபோது எவ்வித முரண்பாடுகளு மின்றி அங்கு குழுமியிருந்த அனைத்து ஸஹாபாக்களும் அபூபக்ர் (றழி) அவர்களுக்கு பைஅத் செய்தனர். இரண்டாவது தினம் மஸ்ஜிதுன் நபவீயில் பொதுமக்கள்

அனைவரதும் பைஅத் இடம் பெற்றது, அங்கு குழுமியிருந்த அனைவரும் பைஅத் செய்தனர். (ஆதாரம்: பைஹகீ)

மதீனா அன்ஸார்களது பிரதேசம் என்பதுடன் அவர்களைச் சார்ந்தவரும் பெரிதும் மதிக்கப்படுபவருமான ஒருவர் இருந்த போதிலும் புலம்பெயர்ந்து வந்து மதீனாவில் குடியேறியிருந்த அத்துடன் குறைஷிக் கோத்திரத்திலும் ஒரு சிறிய கிளையினைச் சேர்ந்த அபூபக்ர் (றழி) அவர்கள் உமர் (றழி) அவர்களால் முன்மொழியப்பட்ட போது எவ்வித மாற்றுக் கருத்துக்களுமின்றி முண்டியடித்துக் கொண்டு பைஅத் செய்தமை ஸஹாபாக்களின் பக்குவம் தகைமைக்கும் திறமைக்கும் முக்கியத்துவமளிக்கப்பட்ட மக்கள் தெரிவுக்கு மிகச் சிறந்த முன்னுதாரணமாகும்.

2. இரண்டாம் வழிமுறையாக:
"சமூகத் தலைமைகளின் ஆலோசனைகளைப் பெற்று தகுதிமிக்க ஒருவரை முன்னைய ஆட்சியாளர் நியமித்தல்": மிகக் குறுகியகால ஆட்சிக்குள்ளேயே தமது அபார திறமைகளை வெளிப்படுத்தி இஸ்லாமிய அரசை பலப்படுத்தியிருந்த கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள் தமது இறுதிக் கட்டத்தை உணர்ந்த வேளை இஸ்லாமிய அரசினதும் மக்களதும் நலன் கருதி தாம் மரணிக்க முன்னரே அன்றைய சமூகத்தில் அதிசிறந்த ஒருவரைத் தலைவராக்க முடிவு செய்தார்கள். அதனடிப்படையில் அன்றைய முக்கியஸ்தர்களான அப்துர் றஹ்மானிப்னு அவ்ப், உஸ்மானிப்னு அப்பான் (றழி) போன்றவர்களை அழைத்து ஆலோசனைகளைப் பெற்றார்கள் அவர்கள் அனைவரது அபிப்பிராயங்களும் ஒத்த கருத்திலும் திருப்தியானதாயும் காணப்படவே உமர் இப்னு கத்தாபை தனக்குப் பின்னால் முஸ்லிம்களின் பொறுப்பினை ஏற்று வழிநடாத்த நியமனம் செய்து மக்களுக்கு அறிவித்தார்கள் மக்களும் அதனை மனப்பூர்வமாக ஏற்று தமது விசுவாசத்தை வெளிப்படுத்தினார்கள்.

3. மூன்றாம் வழிமுறையாக:
இரண்டாம் கலீபா உமர் இப்னுல் கத்தாப் (றழி) அவர்கள் கையாண்ட முறை காணப்படுகிறது, அதாவது தமக்கு முன் சென்ற இரு தலைவர்களும் மேற்கொண்ட வழிமுறைகளிலிருந்து வேறுபட்டதொரு வழிமுறையை அறிமுகம் செய்தார்கள். அதில் மக்கள் தலைவர்கள் கூட்டாகவும் சுதந்திரமாகவும் ஆலோசனை செய்து மிகப் பொருத்தமானவரைத் தெரிவு செய்ய வாய்ப்பினை ஏற்படுத்தினார்கள், அதனடிப்படையில் அன்றைய முஸ்லிம் சமூகத்தில் நபி (ஸல்) அவர்களது திருப்தியையும் அவர்களையடுத்து வந்த கலீபாக்களது திருப்தியையும் முழு முஸ்லிம்களது நன்மதிப்பையும் பெற்றிருந்த அறுவரைத் தெரிந்தெடுத்து அவர்களது ஆலோசனை முடிவின் பிரகாரம் குறிப்பிட்ட சில தினங்களுள் கலீபா தெரிவு செய்யப்பட வேண்டும் என நிபந்தனையிட்டு குழுவை நியமித்தார்கள்.

இது பற்றி இப்னு உமர் (றழி) அவர்கள் குறிப்பிடும் போது: உமர் (றழி) அவர்கள் நஞ்சூட்டப்பட்ட கத்தியினால் குத்தப்பட்டு ஆபத்தான நிலையிலிருந்தபோது, அமீருல் மு.்.மினீன் அவர்களே! உங்களுக்குப் பின்னால் ஒரு பிரதிநிதியை (தலைவரை) நியமிப்பதில்லையா? எனக் கேட்கப்பட்ட போது: நான் அவ்வாறு ஒருவரை நியமித்தாலும் என்னை விடசிறந்த ஒருவர் நியமித்துச் சென்ற வழிமுறை இருக்கிறது, - அதாவது அபூபக்கர் (றழி) – அல்லாது விடுவதானாலும் என்னைவிடச் சிறந்த ஒருவர் நியமிக்காது விட்டுச் சென்ற வழிமுறை இருக்கிறது – அதாவது நபி (ஸல்) அவர்கள் - எனக் கூறினார்கள். தொடந்து இப்னு உமர் (றழி) அவர்கள் கூறுகிறார்கள்: உமர் (றழி) அவர்கள் பெருமானாரை இறுதியாகக் குறிப்பிட்டதுமே, அவர் யாரையும் குறிப்பிட்டு நியமிக்கமாட்டார் என்பதை உணர்ந்து கொண்டேன் எனக் கூறுகிறார்கள்.

(ஆதாரம் :புகாரி முஸ்லிம்)

இவ்வாறு உமர் (றழி) அவர்கள் ஸஹாபாக்களில் மிகப் பிரபலம் பெற்றவர்களில் சுவர்க்கம் வாக்களிக்கப்பட்ட அறுவரை நியமித்ததுடன் தனது உறவினர்களிலிருந்து எவரும் தெரிவு செய்யப்பட்டுவிடக் கூடாது என்பதிலும் கண்டிப்பான உத்தரவினை வழங்கியிருந்தார்கள். இவர்களது இச்செயல் முஸ்லிம் உலகுக்கு மட்டுமல்லாது முழு மனித சமூகத்துக்குமே சிறந்த முன்மாதிரியாகும்.

4. நான்காம் வழிமுறையாக:

"இக்கட்டான சூழ்நிலையில் பொருத்தமான ஒருவரிடம் பொறுப்பினை ஒப்படைத்தல்" அதாவது கலீபா உஸ்மான் (றழி) அவர்கள் குழப்பக்காரக் கும்பலால் அநீதமாகக் கொல்லப்பட்டபோது நிலைமை கட்டுக்கடங்காது அச்சமும் பீதியும் தலைநகரிற் பரவி விட்டபோது, அன்றைய சூழலில் மிகத் தகுதி வாய்ந்தவராகக் காணப்பட்ட அலீ (றழி) அவர்களைப் பதவியேற்குமாறு மக்கள் வலியுறுத்திக் கொண்டிருந்தனர். முதலில் அதனை மறுத்துரைத்த போதிலும் காலத்தின் அவசியம் கருதி தமக்கிருந்த தார்மீகப் பொறுப்பினை அலீ (றழி) அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

அதனைத் தொடர்ந்து இஸ்லாமிய உலகைச் சூழ்ந்துள்ள அபாயங்களிலிருந்து முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

மேற்கூறப்பட்ட நான்கு வழி முறைகளும் நேர்வழிபெற்ற கலீபாக்கள் நால்வரும் தெரிவு தெரிவு செய்யப்பட்ட முறைகளாகும். இதன் மூலம் இஸ்லாமிய நாகரிகம் எக்காலத்துக் கும் எத்தகைய சூழ்நிலைக்கும் பொருத்தமான தீர்வுகளைக் கொண்டுள்ளதுடன் தலைமைத் தெரிவில் கற்றவர்கள் சமூக அங்கீகாரம் பெற்றவர்களுக்கு எவ்வாறு முக்கியத்துவமளித்துள்ளது என்பதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

**இராச்சியப் பரம்பல் (காரணமும் முறைமையும்):**

மதீனாவில் தோற்றம் பெற்ற இஸ்லாமிய அரசின் ஆளுகையானது நபி (ஸல்) அவர்கள் வபாத்தாகும் வரையிலும் அரேபியத் தீபகற்பத்தினைக் கடந்திருக்கவில்லை. ஆயினும் தூதுவர் களை அனுப்பியதன் மூலம் இஸ்லாத்தின் தூதினை உலகறியச் செய்ததுடன் இறுதி வெற்றி இஸ்லாத்துக்கே என்பதைக் குறிப்பிட்டு ரோம பாரஸீக வல்லரசுகள் முஸ்லிம்களின் கரங்களில் வீழ்ச்சியுறும் என்பதனையும் முற்கூட்டி சுபச்செய்தி கூறியிருந்தர்கள்.

இவ்வாறு இஸ்லாமிய அரசு விரிவுபடுத்தப்பட வேண்டும் எனும் சிந்தனை ஏன் தோற்றம் பெற்றது அல்லது முஸ்லிம்கள் இவ்விடயத்தில் ஏன் அதிகம் அக்கறை காட்டினார்கள் என்பதனை நோக்குமிடத்து பின்வரும் விடயங்களை பின்னணிக் காரணிகளாக குறிப்பிடலாம்.

1. இஸ்லாம் இறுதியானதும் உலகளாவிய வழிகாட்டியுமாக அனைத்தையும் சிருஷ்டித்த இரட்சகனால் பிரகடனப்படுத்தப்பட்டமையால் அதனை முழு உலகுக்கும் எடுத்துச் செல்ல வேண்டிய பணி முஸ்லிம்கள் மீது கடமையாக்கப்பட்டமை
2. உலகில் இறைசட்டங்களை அமுல் செய்யவும் அதனை நிர்வகிக்கவும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சமூகமாக முஸ்லிம்கள் காணப்படுதல்
3. இஸ்லாமிய அரசைச் சூழவிருந்த அன்றைய சமூகம் இஸ்லாத்தையும் முஸ்லிம்களை யும் ஒழித்துக் கட்டிவிட பல்வேறு வழிமுறைகளைக் கையாண்ட வண்ணமிருந்தனர் எனவே, அவர்களது அபாயங்களிலிருந்து இஸ்லாமிய உலகை காப்பாற்ற வேண்டு மென்பதற்காக இராச்சிய விரிவாக்கம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.
4. இஸ்லாத்தின் தூது எட்டப்பெற்ற போது மக்கள் கூட்டம் கூட்டமாக அதில் இணைந்த வண்ணமிருந்தனர், அதனையடுத்து முஸ்லிம்களின் பரம்பல் அண்டைய பகுதிகளில் மிக வேகமாகக் காணப்பட்டது, ஆகவே அப்பகுதிகள் இயல்பாகவே இஸ்லாமிய இராச்சியத்துடன் இணையும் நிலை காணப்பட்டது.
5. தமது ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளாலும் துஷ்பிரயோகங்களாலும் விரக்தி யுற்றிருந்த அயல் நாட்டு மக்கள் முஸ்லிம்களின் நியாயமானதும் மக்கள் உரிமைகளை மதிக்கக் கூடியதுமாகிய ஆட்சியால் கவரப்பட்டு தம்மை மீட்டு இஸ்லாமிய ஆட்சியினுள் இணைத்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொண்டமை போன்ற பல விடயங் களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

அவ்வாறே இஸ்லாமிய சாம்ராஜ்யப் பரம்பலின் முறைமைகளை எடுத்து நோக்கும் போது, நபி (ஸல்) அவர்களோ அல்லது ஸஹாபாக்களோ வன்முறைகளை ஒரு போதிலும் கையாள வில்லை. பதிலாக இஸ்லாத்தின் வழிகாட்டலுக்கேற்ப மிருதுவாகவும் மனிதாபிமானத்து டனேயே தமது பணிகளை மேற்கொண்டனர்.

முதலில் தம்மைச் சூழவிருந்த முரண்பட்ட அறபுக் கோத்திரங்களை வழிப்படுத்தினார்கள். அந்தவகையில் ஸகாத் வழங்க மறுத்தோரை நல்வழிப்படுத்தி இஸ்லாமிய அரசின்

கட்டுக்கோப்பினுட் கொண்டு வந்தார்கள். பொய் நபிமார்களாக உருவெடுத்துக் கலகம் விளைவித்தவர்களை விரட்டியடித்து அவர்களது குழப்பங்களை அடக்கினார்கள், அதற்கடுத்து இஸ்லாமிய அரசின் எல்லைப் புற பகுதிகளான ரோம பாரஸீக வல்லரசுகளின் தடுப்புப் பிரதேசங்களாக விளங்கிய அறபுப் பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தார்கள். பின்னர் உரோம பாரஸீக வல்லரசுகளின் சொந்த நிலப்பரப்புக்களுட் பிரவேசித்து அவற்றை ஒன்றன் பின் ஒன்றாக மிகக் குறுகிய காலப் பகுதியினுட் கொண்டு வந்தனர். அவ்வாறே தொடர்ந்தும் வடஆபிரிக்கப் பிராந்தியங்ளுட் பிரவேசித்து அவற்றையும் வெற்றி பெற்றனர்.

இவ்வாறு இஸ்லாத்தின் சமாதானம் சுபீட்சங்களை உலகளாவிய மக்கள் அனைவரும் சுகிக்க வேண்டும் எனும் முயற்சியில் ஈடுபட்ட ஸஹாபாக்களின் படைகள் தமது நடவடிக்கைகளின் போது மிக சிறப்பான வழிமுறைகளைக் கையாண்டனர்.

அதாவது, அவர்கள் பிரவேசிக்கும் ஒவ்வொரு பிராந்திய மக்களிடமும் முதலில் இஸ்லாத்தின் தூதைத் தெளிவுபடுத்தி அதனை ஏற்றுக் கொள்ள ஆர்வமூட்டினார்கள், அதற்கு விரும்பாத விடத்து இஸ்லாமிய அரசின் கட்டுப்பாட்டினுள் வாழவும் அதற்கான வரிகளைச் செலுத்தவும் அவகாசம் வழங்கினார்கள் அதனையும் நிராகரித்து சண்டைக்குத் தயாராகும் பிரதேசங்க ளுடனேயே போரில் ஈடுபட்டு அவர்களை இஸ்லாமிய ஆட்சியின் கீழ் இணைத்தனர். இவ்வாறான நடவடிக்கைகளின் போது அவர்கள் கடைப்பிடித்த ஒழுக்கங்களும் உயரிய பண்பாடுகளும் இஸ்லாத்திற்கெதிராய்ப் போராடிய இலட்சக்கணக்கான மக்களை இஸ்லாத்தின் பால் கவரச்செய்ததுடன் இஸ்லாத்தின் காவலர்களாய் மாற்றியமையும் இவ்களது உயர் பண்பாட்டினை இயம்பிக் கொண்டிருக்கின்றது.

**கலீபாக்கள் கால நிர்வாக, நிதி, நீதி ஒழுங்குகள்:-**

**கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள் காலம்:-**

நபி (ஸல்) அவர்கள் காலத்தினைப் பார்க்கிலும் கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள் காலத்தில் இஸ்லாமிய அரசு மேலும் பலம் பெற்றும் விரிவு பெற்றும் காணப்பட்டமையால் நிர்வாக நிதி நீதி ஒழுங்குகளிலும் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டிய தேவைகள் காணப்பட்டன. அதனடிப்படையில் கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள் கால நிர்வாகள் பின்வருமாறு அமையப் பெற்றிருந்தது:

ஆட்சித் தலை நகராக மதீனாவே காணப்பட்டது, அத்துடன் சட்டம் நீதி போன்ற விடயங்களில் கலீபாவுக்கு உதவியாக உமர் இப்னு கத்தாப் (றழி) அவர்கள் பணியாற்றினார்கள், ஆயினும் சுமார் ஒருவருட காலத்தின் பின்னர் தனது பதவியை ராஜினாமா செய்வதாக கலீபாவுக்குத் தெரியப்படுத்தினார்கள் அப்போது கலீபா காரணத்தைக் கேட்டபோது, நான் ஒரு வருட காலம் நீதித்துறைக்குப் பொறுப்பாயிருந்தும் இதுவரை ஒரு முறைப்பாடேனும் வரவில்லை மக்களெல் லாம் அல்லாஹ்வின் கட்டளைகளை சரிவரப் பின்பற்றுவதால் நீதித்துறையின் தேவை

நீங்கிவிட்டது எனக்குறிப்பிட்டார்கள். இதனைக்கேட்ட கலீபா அபூபக்ர் (றழி) மகிழ்ச்சி பொங்க அல்லாஹ்வைப் புகழ்ந்தார்கள். இந்நிகழ்வு முதற்கலீபாவின் காலத்தில் நீதித்துறையின் நிலை எவ்வாறிருந்தது என்பதனைத் தெளிவாக எடுத்துரைக்கிறது எனலாம்.

பைத்துல்மாலின் நிதி நடவடிக்கைகளுக்கு ஷாம் தேசத்தின் கட்டளைத் தளபதியாக நியமனம் பெறும் வரை அபூ உபைதா (றழி) அவர்கள் பொறுப்பாளாரகக் கடமையாற்றினார்கள். ஸெய்த் பின் தாபித் (றழி), உஸ்மான் பின் அப்பான் (றழி) ஆகியோர் எழுத்துப் பணிகளை மேற்கொள்ளும் செயலாளர்களாகச் பணியாற்றினர்.

அதே போல் மாநிலங்களது நிர்வாகம் செவ்வனே நடந்தேறும் வண்ணம் ஒவ்வொரு மாநிலத்துக்கும் கவர்னர்களை நியமித்ததுடன் அவர்களுக்கான பணிகளையும் வரையறை செய்தார்கள். அந்த வகையில்:

1. மக்காவின் கவர்னராக இதாப் பின் உஸைத் (றழி) அவர்களையும்

2. உஸ்மான் பின் அபில் ஆஸ் (றழி) அவர்களை தாயிபிற்கும்

3. ஸன்ஆவின்(யெமென்) கவர்னராக முஹாஜிர் பின் அபீ உமையாவையும்

4. ஹழ்றமௌத் (யெமென்) கவர்கனராக ஸியாத் பின் லபீத் என்பவரையும்

5. பஹ்றைன் கவர்னராக அலா பின ஹழ்றமீ (றழி) அவர்களையும்

6. நஜ்றான் கவர்னராக ஜரீர் இப்னு அப்தில்லாஹ் என்பவரையும் நியமித்ததோடு புதிது புதிதாக கைப்பற்றப்பட்ட பிரதேசங்களுக்கும் அவ்வப் பகுதிகளுக்குப் பொருத்தமான ஆளுநர் களை நியமித்தார்கள். அத்துடன் அவ்வப் பிரதேசங்களின் பிரதம இமாமாகவும், நீதி வழங்கல், சட்டம் ஒழுங்குகளை நிலைநாட்டல், நிதி விவகாரங்களை கண்காணித்தல் போன்ற கடமை களையும் அவர்களுக்குப் பணித்தார்கள். ஆதலால் ஆழுநர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படு வோரை மிகக் கவனமாகவே அதாவது நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு தெரிவு செய்தார்களோ அவ்வாறே இவர்களும் தெரிவு செய்தார்கள்.

இவர்களது தெரிவில் உறவினர்கள் அல்லது நெருக்கமானவர்கள் என எவ்வித முன்னுரிமை யும் வழங்கப்படவில்லை தகைமைக்கே முக்கியத்துவம் வளங்கப்பட்டது. அத்துடன் பதவி கேட்போருக்கு முற்றிலும் அது மறுக்கப்பட்டது. எனவே இவர்களது ஆட்சியில் கவர்னர்கள் மிகத் திறமையானவர்களாகவும் விசுவாசமுடையோராகவும் காணப்பட்டனர்.

**கலீபா உமர் (றழி) அவர்கள் காலம்:-**

கலீபா அபூபக்ர் (றழி) அவர்களின் பின் இஸ்லாமிய அரசின் நிர்வாகப் பணிகளைப் பொறுப்பேற்ற இரண்டாம் கலீபா உமர் (றழி) அவர்கள் முன்சென்ற இரு தலைவர்களது அடிச்

சுவடுகளையும் பின்பற்றி உலகம் போற்றும் மிகச் சிறந்ததோர் ஆட்சியினை முஸ்லிம் உலகுக்கு வழங்கினார்கள்.

இவர்களது காலம் நிர்வாகம், நிதி, நீதி ஒழுங்குகள் செழித்தோங்கிய காலமாகக் கொள்ளப் படுகிறது. அதாவது முன்சென்றவர்கள் இவ்விடயங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகளுடன் பல புதிய முன்னேற்றகரமான ஒழுங்குகளை அறிமுகப்படுத்தியிருந்தார்கள்.

நிர்வாகம் சீராக நடைபெற வேண்டுமென்பதற்காக கவர்னர்கள் தெரிவில் மிக இறுக்கமான ஒழுங்குகளைக் கடைப்பிடித்தார்கள். ஒருவரை ஆளுனராகத் தெரிவுசெய்வதற்கு முக்கியமான நான்கு பண்புகளை நிபந்தனையிட்டார்கள் அதாவது:

1. ஹலாலான வழிகளில் பொருட் சேர்க்கும் திறமை
2. அதனை உரிய வழிகளிற் செலவிடும் திறமை,
3. கண்டிப்பானவராயிருத்தல் ஆனால் அடக்குமுறை இருக்கக் கூடாது,
4. மிருதுவானவராக இருக்க வேண்டும் ஆனால் பலவீனம் இருக்கக் கூடாது.

என்பவற்றுடன் எப்போதும் ஒரு கவர்னரை நியமிக்க முன்னர் அவர் பற்றி பகிரங்கமாகவும் இரகசியமாகவும் பரீட்சித்த பின்னரே நியமனம் வழங்குவார்கள். அத்துடன் மக்கள் தேவைக்கு முன்னால் எப்போதும் ஆளுனரின் வாயிற் கதவு திறந்திருக்க வேண்டும் எனக் கடுமையான நிபந்தனைகளிட்டார்கள், அத்துடன் பதவி கேட்போருக்கு நாம் எந்தப் பதவியும் வழங்கமாட்டோம் எனும் நபி (ஸல்) அவர்களின் நிலைப்பாட்டிலே கலீபா உமர் (றழி) அவர்களும் மிக உறுதியாகக் காணப்பட்டார்கள்.

மேலும் கவர்னர்கள் இரக்க சுபாவமுடையவர்களாயிருக்க வேண்டும் என்பதில் மிகக் கூடுதல் கவனம் செலுத்தியதுடன் இவற்றில் குறைகாணப்படும் கவர்னர்கள் யாராயிருப்பினும் அவரை பதவியிலிருந்து ஓரங்கட்டுவதில் சிறிதும் தாமதம் காட்டவில்லை.

இஸ்லாமிய அரசைச் சுற்றியிருந்த ஏனைய பகுதி மக்களுக்கும் இஸ்லாத்தின் விமோசனம் கிடைக்கப்பெறவேண்டுமெனும் மனிதாபிமான நடவடிக்கைகளால் பல பிரதேசங்கள் இஸ்லாமிய அரசின் கட்டுப்பாட்டிக் கீழ் இணைந்த வண்ணமிருந்தன. அவற்றை சரியாக நிர்வகிக்க வேண்டுமென்பதற்காக சிறந்த நிர்வாகக் கட்டமைப்பொன்றினைக் கலீபா ஏற்படுத்தினார்கள்.

அவர்களது நிர்வாகத்தில் தலைமை அதிகாரிகளையும் பதவிகளையும் பின்வருமாறு நிரற்படுத்தலாம்:

1. (காதிப்) தலைமைக் காரியதரிசி
2. (காதிபுத் தீவான்) இராணுவ காரியதரிசி
3. (ஸாஹிபுல் கறாஜ்) இறைவரி வசூலுக்கான அதிகாரி

4. (ஸாஹிபுல் அஹ்தாத்) பொலிஸ் அதிகாரி
5. (ஸாஹிபு பைதில் மால்) திறைசேரி செயலாளர்
6. (காழீ) தலைமை நீதிபதி

மேற்கூறப்பட்டுள்ள அதிகாரிகள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் நியமனம் செய்யப்பட்டதால் அவர்களைக் கண்காணித்தல் மேற்பார்வை செய்தல் வழிநடாத்தல் போன்ற பணிகள் ஆளுநர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அவர்களது காலத்தில் திறைசேரியை நோக்கும் போது:

முஸ்லிம்கள் வரலாற்றில் முதன்முதலாக திறைசேரியை நிறுவிய பெருமை கலீபா உமர் (றழி) அவர்களையே சாரும். இதற்கு ஸகாத், ஜிஸ்யா, கனீமத், கறாஜ், வாரிஸுகளற்றவர்கள் விட்டுச் சென்ற சொத்துக்கள் போன்றவற்றினூடாகக் வருமானங்கள் கிடைக்கப்பெற்றன. இவ்வாறான வரவுகள் பொருத்தமானவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப் படுவதற்காகவும், நெறிப் படுத்துவதற்காகவும் மதிப்பீடு செய்தல், ஆவணப்படுத்தல் போன்ற விடயங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

**காணி நிர்வாகம்:**

இஸ்லாமியப் படைகளால் தொடரப்பட்ட புனர்வாழ்வு நடவடிக்கைகளால் மிக நீண்ட நிலப்பரப்புக்கள் கிலாபத்தின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. இத்தகைய நிலப்பரப்பில் விவசாயக் காணிகளும் பெருமளவிற் காணப்பட்டன. பொதுவாக படை நடவடிக்கைகளின் போது கையாளப்படும் வெற்றியாளர்கள் தமக்கிடையே பகிர்ந்து கொள்ளும் மரபினை கலீபா உமர் (றழி) அவர்கள் மாற்றியமைத்தார்கள். அதில் தனிநபர்களுக்கு சொந்த மில்லாதவற்றை அரச உடமையாக்கியும், தனியாருக்குச் சொந்தமானவற்றை அதன் உரித்தாளிகளே தொடர்ந்து பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்கியதோடு அதன் வருமானத்திலிருந்து ஒரு சிறு தொகையை திறைசேரி நிதிக்கான ஒரு வரியாக செலுத்தவும் உத்தரவிட்டார்கள்.

**இராணுவக் கட்டமைப்பு:**

இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதல் ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவம் உருவாக்கப்பட்டது கலீபா உமர் (றழி) அவர்களது காலத்திலேயாகும். இஸ்லாமிய நிர்வாகத்திலுள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் இராணுவ சேவை கடமை என்பதைக் கொள்கையாகக் கொண்ட கலீபா இராணுவத்தை நிரந்தர இராணுவம், தொண்டர் (நிரந்தரமற்ற) படை என இரு பிரிவுகளாகப் பிரித்து முதற் பிரிவினரை சுமார் எட்டு வகையாக வகைப்படுத்தி அதற்கேற்ப சம்பளத் தொகைகளையும் நிர்ணயம் செய்தார்கள். இரண்டாம் பிரிவினர் அவசியம் ஏற்படும் போது மட்டும் சேவைக்கழைக்கப்பட்டனர்.

இராணுவத்தினரை நிர்வகிக்க ''தீவானுல் ஜுன்த்'' எனும் இலாகாவை உருவாக்கி அவற்றின் கிளைகளை அனைத்து முக்கிய நகர்களிலும் நிறுவினார்கள், அத்துடன் படையினருக்கான தங்குமிடங்களைக் கட்டுவித்ததோடு குடியிருப்புக்களையும் நிறுவினார்கள். இவை தவிர சுமார் நான்காயிரம் குதிரைகளுக்கான பராமரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு எந்நேரமும் யுத்த நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் அவை பராமரிக்கப்பட்டன.

**நீதி நிர்வாகம்:**

வரலாற்றில் முதன் முதலாக நீதித்துறையை பொது நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்தி தனியாகவும் சுதந்திரமாகவும் இயங்கச் செய்த பெருமை கலீபா உமரவர்களையே சாரும். ஷரீஆ சட்டங்களில் தேர்ந்தவர்களை நீதிபதிகளாகத் தெரிவு செய்த கலீபா இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையிலேயே தீர்ப்புக்களை வழங்குமாறு பணித்ததோடு ஊழல் மோசடிகளைத் தவிர்ப்பதற்காக நீதிபதிகளுக்கு மிக உயர்ந்த சம்பளங்களை வழங்கினார்கள்.

**திறைசேரியும் நாணயமும்:**

முன்னைய இரு தலைவர்களது காலப் பிரிவிலும் இல்லாதவாறு இஸ்லாமிய ஆட்சி விரிவடைந்து வரவு செலவுகளும் அதிகரித்தன. ஆயினும் செலவினங்களைப் பார்க்கிலும் வரவு அதிகரித்தமையால் மேலதிக செல்வத்தை எவ்வாறு கையாளலாம் என்பதை ஸஹாபாக்களின் ஆலோசனை சபையில் விவாதித்த கலீபா இறுதியில் திறைசேரி ஒன்றை நிறுவும் முடிவிற்கு வந்தார். அந்த வகையில் இஸ்லாமிய உலகில் முதற் திறைசேரி கலீபா அவர்களின் ஆட்சியிலேயே நிறுவப்பட்டு அதற்கான உத்தியோகத்தரும் உதவியாளர்களும் கணக்காளர் களும் நியமனம் செய்யப்பட்டனர். காலப்போக்கில் மேலும் விரிவடைந்த இந்நிறுவனம் மாகாணங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு அங்கும் இதன் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கிளை களில் மேலதிகமாகத் திரளும் செல்வம் மத்திய நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதனால் இராணவம் நீதிபதிகள் மற்றும் ஏனைய அரச ஊழியர்களுக்கான ஊதியங்கள் வழங்குவது இலகுவானதுடன் பொது மக்களுக்கும் உதவுத் தொகை தொடராக வழங்குவது இலகுவானது. அது மட்டுமல்லாது இஸ்லாமிய வரலாற்றில் முதன்முதலாக தனித்துவமான நாணயம் ஒன்றினை அச்சிட்டு வெளியிட்ட பெருமையும் கலீபா உமர் (றழி) அவர்களையே சாரும்.

**கலீபா உஸ்மான் (றழி) அவர்கள்:**

உஸ்மான் (றழி) அவர்கள் தனது முப்பத்து நான்காம் வயதில் அபூபக்ர் (றழி) அவர்களது தூண்டுதலால் இஸ்லாத்தை ஏற்றார்கள். இதன் மூலம் இஸ்லாத்திற் பிரவேசித்த முதல் பத்துப்பேரில் ஒருவராக மாறினார்கள். அன்று தொடக்கம் அதனைப் பரவச் செய்வதில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திய அவர்கள் வர்த்தகராகவும் செல்வந்தராகவுமிருந்ததால் அவர்களின் செல்வத்தில் பெரும் பகுதி இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகவே செலவிடப்பட்டது. அனைத்து ஸஹாபாக்கள் மத்தியிலும் அபூபக்ர், உமர் (றழி) ஆகியோருக்கடுத்த அந்தஸ்தில் நோக்கப்படுமளவு சிறப்பிடம் பெற்றிருந்தார்கள்.

செல்வத்தின் மூலம் பல்வேறு சமூக நலப்பணிகளை மேற்கொண்டது மட்டுமல்லாது தமக்கிருந்த எழுத்தறிவின் மூலம் அல்லாஹ்வின் வார்த்தைகளான வஹீயை எழுதும் பணியையும் நபிகளார் (ஸல்) அவர்களுக்குப் பக்கத்திலிருந்து மேற்கொண்டிருக்கிறார்கள். பிற்காலத்தில் அல்-குர்ஆனை ஓதுவதில் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்காக அபூபக்ர் (றழி) அவர்கள் காலத்துத் தொகுப்பின் அடிப்படையிற் பல பிரதிகள் செய்து முழு முஸ்லிம் தேசங்களுக்கும் அனுப்பிவைத்து அந்த குழப்ப நிலையை நீக்கியிருக்கி றார்கள். அதுமட்டுமல்லாது இஸ்லாத்தைக் கடல்கடந்து கொண்டு செல்வதற்கான கப்பற் படையின் தேவையை தமது ஆட்சிக் காலத்தில் நிறைவு செய்தார்கள். இந்நடவடிக்கையே இஸ்லாம் மத்திய தரைக்கடலையும் கடந்து ஐரோப்பாக் கண்டத்தினுட் பிரவேசிக்கவும் பிற் காலத்தில் கொன்ஸ்தான்திநேப்பிள் கைப்பற்றப்பட்டு ஓர் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் தலை நகரமாக மாறியமைக்கும் அத்திவாரமாக அமைந்தது என்றால் அது மிகையல்ல.

உஸ்மான் (றழி) அவர்கள், முன்சென்ற இரு கலீபாக்களாலும் மேற்கொள்ளப்பட்டது போன்றே தமது காலப் பகுதியிலும் இஸ்லாமிய சாம்ராஜ்ய விரிவாக்கம் ஸ்தீரணம் போன்றவற்றை மிக சிறப்பாக முன்னெடுத்தார்கள். அந்த வகையில் பலபுதிய பிரதேசங்கள் இணைக்கப்பட்டு மிகவும் விசாலமானதொரு சாம்ராஜ்யமாக இஸ்லாமிய சாம்ராஜ்யம் பிரகாசித்தது.

இவ்வாறு பரந்து விரிந்ததொரு சாம்ராஜ்யத்தை தனது நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வந்திருந்த கலீபா அவர்கள் காலத்தின் தேவை பொருத்தப்பாட்டுக்கேற்ப சில மாற்றங்களை நிர்வாகத்தில் ஏற்படுத்தினார்கள்.

இயல்பிலேயே இளகிய மனமும் இரக்க சுபாவமும் கொண்ட இவர்கள் குடிமக்களுடன் மிருதுவான போக்கினையே கடைப்பிடித்தார்கள். முன்சென்ற கலீபா மிகவும் கண்டிப்பானதும் இறுக்கமானதுமான நிர்வாக முறைமையைக் கடைப்பிடித்திருந்தமையால் கட்டப்பாட்டுடன் வாழ்ந்த ஒரு சாரார் கலீபாவின் இளகிய மனப்பாங்கினைப் பலவீனமாக புலப்படுத்தினர். தமது போக்கில் விரும்பியவாறு வாழ எத்தனித்தனர். இதற்கு இஸ்லாமிய உலகின் அன்றைய செல்வச் செளிப்பும் சாதகமாயமைந்தது எனலாம்.

அதே போன்று செல்வாக்குமிக்க பழம்பெரும் ஸஹாபாக்கள் மதீனாவை விட்டு வெளியேற உமர் (றழி) அவர்கள் அனுமதித்திருக்கவில்லை. ஆனால் கலீபா இவ்விடயத்தில் நெகிழ்வுப் போக்கினைக் கடைப்பிடித்தமையால் முன்னணி ஸஹாபாக்களிற் பலர் தலை நகரிலிருந்து வேறு பிரதேசங்கள் நோக்கி இடம் பெயரத் தொடங்கினர்.

தனது மனோநிலைக்கேற்ப விட்டுக் கொடுப்புடனான நிர்வாகத்தினை விரும்பிய கலீபா அவ்வாறான இயல்புடையவர்களையே கவர்னர்களாக நியமிக்க விரும்பினார். இதனால் கலீபா உமர் (றழி) அவர்களது கால கவர்னர்கள் கண்டிப்பான நிர்வாக முறைமைக்குப் பழக்கப் பட்டிருந்தமையால் அவர்களிற் பலரை மாற்றி தமது இயல்புக்கு இசைவானவர்களை நியமனம் செய்தார்கள். அவ்வேளை மிக நீண்ட கால நிர்வாக அனுபவம் கொண்ட சிலரை தொடர்ந்தும்

பதவியில் நீடிக்கச் செய்தார்கள் அவர்களிற் சிலர் உமையாப் பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கலீபா உஸ்மான் (றழி) அவர்களது காலத்தில் இஸ்லாமிய உலகு செல்வச் செழிப்புற்று பைத்துல்மாலின் சேமிப்புக்களும் பன்மடங்கு அதிகரித்துக் காணப்பட்டது. குறிப்பாக குதிரைகள் ஒட்டகைகளின் எண்ணிக்கைகள் அதிகரித்தமையால் அரச மேய்ச்சல் நிலங்களை விஸ்தரிப்பு செய்யவும் நடைமுறைகளில் சில மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டிய தேவையும் கலீபாவுக்கு ஏற்பட்டது, அதனையும் அவர்கள் மேற்கொண்டார்கள். திறைசேரியில் செல்வம் குவிந்து காணப்பட்டமையால் கொடுப்பனவுகளும் அதிகரித்துக் காணப்பட்டது ஆயினும் தீவிரப் போக்குடைய ஒருசிலர் அவை எவ்விதத்திலும் தேங்கக் கூடாது அவ்வப்போது அனைத்தும் செலவிடப்படவேண்டும் எனும் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தினர்.

நீதித்துறையைப் பொறுத்தவரையிலும் கலீபா முன்சென்ற தமது தோழர்களின் நிலைப்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை, ஆயினும் மிருதுவான போக்கினையே கடைப்பிடித்தார்கள். மேலும் தண்டனைகள் வழங்குவதிலும் இலகு நடைமுறையையே பேணினார்கள். இந்நிலை குழப்பவாதிகள் இவர்களை பலவீனராக நோக்கவும் தமது தவறான நடவடிக்கைகளுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பினை ஏற்படுத்தியது எனலாம்.

அதேபோல் காலத்தின் தேவைகருதி மேலும் சில விடயங்களில் முன்சென்றோரின் நடைமுறை களில் சில மாற்றங்களை கலீபா ஏற்படுத்தினார். இவற்றின் மூலம் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் நன்மை செய்வதே அவர்களின் நோக்கமாயிருந்தது. ஆனபோதிலும் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் நீங்காத காழ்ப்புக் கொண்டிருந்த யூதர்களும் குழப்ப வாதிகளும் சந்தர்ப்பத்தினைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை.

கிளர்ச்சியாளர்களின் நிபந்தனைகளை ஏற்றுத் தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வாய்ப்பி ருந்தும் நபி (ஸல்) அவர்கள் முற்கூட்டியே கூறிவைத்ததற்கிணங்க: அநியாயக் காரர்கள் அல்லாஹ்வால் உமக்கு அணிவிக்கப்பட்ட ஓர் ஆடையைக் கழற்றி விடுமாறு உம்மைக் கோரினால் நீர் அதற்கு உடன்பட்டு விடாதே, என்னுடன் வந்து சேர்ந்து கொள்ளும் வரை பொறுமையைக் கடைப்பிடிப்பீராக! எனக் கூறியிருந்தார்கள்.

இதனால் தான் ஷஹீதாக்கப்படும் வரை நபியவர்களின் வாக்கில் அசையா நம்பிக்கையுடன் இருந்து ஹிஜ்ரி 35ஆம் வருடம் இஸ்லாத்திற்காகவும் முஸ்லிம் தேசத்திற்காகவும் தமதுயிரைத் தியாகம் செய்தார்கள் மூன்றாம் கலீபா உஸ்மான் (றழி) அவர்கள்.

**கலீபா அலீ இப்னு அபீதாலிப் (றழி) அவர்கள்**

இஸ்லாமிய வரலாற்றில் மிகவும் துக்ககரமானதும் கறைபடித்ததுமாகிய நிகழ்வுகளின் பின்னணியில் நிர்ப்பந்த சூழலில் நிர்வாகப் பொறுப்பினைக் கையேற்ற கலீபா அலீ (றழி) அவர்கள் தமது காலப் பகுதி முழுவதுமே போராட்டங்களில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்த

நிலைக்குத் தள்ளப் பட்டிருந்தார்கள். முன்சென்ற மூன்று கலீபாக்களது நிர்வாகங்களிலும் முக்கிய பொறுப்புக்களை ஏற்றும் ஆலோசனைகள் வழங்கியும் ஆட்சிகள் சிறப்புறப் பங்காற்றிய போதிலும் ஆட்சி பொறுப்பு அவர்களது கைக்கு மாறப்பட்டபோது அதனை திருப்தியுடன் மேற்கொள்ள விரோதிகள் வாய்ப்பளிக்கவில்லை.

ஸெய்யிதினா அலீ (றழி) அவர்கள் கிலாபத்திற்காக பைஅத் செய்யப்பட்ட பின்னர் காணப்பட்ட கொந்தளிப்பு நிலையினை சரிசெய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள். அத்துடன் தனது நிர்வாகத்திற்கு ஒத்துழைக்குமாறு மாகாண ஆளுநர்களுக்கு அழைப்பு விடுத்ததுடன் முரண்பட்ட கவர்னர்களை நீக்கி அவ்விடத்துக்குத் தமது தரப்பிலிருந்து புதியவர்களை அனுப்பி வைத்தார்கள். அவர்களுள் சிலர் அதற்கு கட்டுப்பட்ட அதேவேளை சிலர் முரண்பட்டதுடன் பதவியில் தொடர்ந்தும் நீடித்தனர் அத்துடன் தமக்கு ஆதரவாக மக்களையும் ஒன்றுதிரட்டினர்.

இதனால், முதலில் முரண்பட்டவர்களை தனக்குக் கீழ்ப்படிய வைக்கும் நிர்ப்பந்தம் கலீபாவுக்கு ஏற்பட்டது. இந்நிலை கலீபாவை பல உள்நாட்டு யுத்தங்களில் ஈடுபட நிர்ப்பந்தித்ததுடன் நிர்வாகத்தை ஒழுங்காகப் பரிபாலிக்கவோ இஸ்லாமிய உலகின் விஸ்தரிப்புக்கோ போதிய அவகாசத்தினை வழங்கவில்லை என்றே சொல்ல முடியும்.

**கலீபாக்கள் எதிர்நோக்கிய சவால்களும் ஆளுமைப் பண்புகளும்:**

நபி (ஸல்) அவர்களின் மறைவுடன் தோன்றிய பல்வேறு சமூக அரசியற் கொந்தளிப்புக்களின் மத்தியில் இஸ்லாமிய அரசையும் முஸ்லிம் சமூகத்தையும் பாதுகாத்து வழிநடாத்தும் பொறுப்பினைத் தமது தோள்களில் சுமந்து கொண்ட ஸஹாபாப் பெருமக்கள் உலகம் வியக்கும் வகையில் அப் பொறுப்பினைச் செவ்வனே நிறைவேற்றியமை நபி (ஸல்) அவர்களின் பாசறையிற் பெற்ற பயிற்சியின் பின்னணியே எனின் மிகையல்ல.

மிகக் குறுகிய கால ஆயுளைக் கொண்டிருந்த இஸ்லாமிய அரசுக்கு முன்னால் ஏராளமான சவால்கள் எழுந்த வண்ணமிருந்தன. அவற்றை உறுதியான இறை நம்பிக்கையுடனும் நபி (ஸல்) அவர்களது வழிகாட்டலின் அடிப்படையிலும் முன்னணி ஸஹாபாக்கள் முறியடித்து சமுதாயத்தை வெற்றிப் பாதையில் இட்டுச் சென்றார்கள். அவ்வாறான சவால்களில் முதற்கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள் எதிர்கொண்டவைகளை நோக்கும் போது:

அ. நபி (ஸல்) அவர்களது மரணச் செய்தி காணப்பட்டது. அதாவது சற்றும் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட அண்ணலாரின் மறைவை ஸஹாபாக்களின் உணர்வுகள் ஏற்கத் தயங்கின, வெவ்வேறு விதமான சிந்தனை களும் தடுமாற்றங்களும் அவர்களை ஆட் கொண்டன. தமது நேசத்திற்குரிய தலைவரை மரணத்துடன் தொடர்புபடுத்தும் வார்த்தைகள் காதுகளில் விழுவதைக்கூட அவர்களாற் சகிக்க முடியாமலிருந்தது. இதனாலேயே சமூகத்தின் அதிஉயர் நிலையிலிருந்த உமர் (றழி) அவர்கள் கூட நிலை குழம்பிப் போயிருந்தார்கள். இந்நிலையிலேயே ஸெய்யிதினா அபூபக்ர் (றழி) அவர்களின் ஆளுமை வெளிப்பட்டது.

அனைவரையும் ஆசுவாசப்படுத்தும் வகையில் அவர்களது பிரசன்னமும் விளக்கவுரையும் அமைந்தது. அனைத்து ஸஹாபாக்களும் அவர்களது அறிவுரைக்கு செவிமடுத்தார்கள் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

ஆ. ஸகீபது பனீ ஸாஇதாவின் நிகழ்வு காணப்பட்டது, அங்கும் ஸித்தீக் (றழி) அவர்களது ஆளுமையும் அந்தஸ்தும் வெளிப்பட்டது.

இ. நுபி (ஸல்) அவர்களால் தயார்படுத்தப்பட்ட உஸாமா (றழி) அவர்களின் படையை ரோமதேசம் நோக்கி அனுப்புவதா அல்லது மதீனாவின் பாதுகாப்புக்காக நிறுத்திய் கொள்வதா என்ற சவால். இதில் படையை அனுப்பும் முடிவில் மிக்க உறுதியாகக் காணப்பட்ட கலீபா அவ்வாறே அமுல்படுத்தவும் செய்தார்கள். இந்நடவடிக்கையே இஸ்லாத்தின் எல்லைப்புற எதிரிகளை கிலிகொள்ளச் செய்தது எனலாம்

ஈ. போய் நபிமார்களின் தோற்றம்: நபிகளாரின் வபாத்தின் பின் அவர்களுக்கிருந்த சமூக அந்தஸ்தினை தாமும் பெற்றுக் கொள்ளலாம் எனும் நப்பாசையில் பல பொய்யர்கள் தம்மை நபியாக அறிமுகம் செய்து மக்களை வழிகெடுக்க களமிறங்கினர். இவர்களனைவரையும் மிகக் கடுமையான நடவடிக்கை மூலம் துடைத்தெறிந்தார்கள் கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள்.

உ. ஸகாத் மறுப்போர்: இஸ்லாத்தில் ஸ்திரமற்றிருந்த இவர்கள் கலீபாவை பலவீனமாகக் கருதி ஸகாத்தை மறுத்து இஸ்லாமிய அரசுக்கு சவால் விடுத்தார்கள். கலீபா அவர்களுக்கெதிராய் மேற்கொண்ட நடவடிக்கையின் கனதியை உணர்ந்த அவர்கள் உடனடியாகத் தமது நிலைப்பாட்டினை மாற்றியதுடன் இஸ்லாமிய அரசுக்குக் கட்டுப்படவும் செய்தனர்

ஊ. அல்குர்ஆனை ஒன்று திரட்டல்: நபி (ஸல்) அவர்களது அடிச்சுவட்டிலிருந்து சற்றும் விலக மாட்டேன் எனும் உறுதிப்பாட்டுடன் காணப்பட்ட கலீபாவுக்கு முன்னால் நபிகளார் மேற்கொள்ளாத விடயத்தில் ஈடுபடுவது மிகப்பாரதூரமான விடயமாகக் காணப்பட்டது ஆயினும் சந்தர்ப்ப சூழ்நிலையினை உணர்ந்த கலீபா அதற்கான அனுமதியை வழங்கியதுடன் மிக மிக நுணுக்கமாக அதனைக் கையாண்டார்கள்.

இவ்வாறு இன்னும் பல உள்நாட்டு வெளிநாட்டு சவால்களை எதிர் கொண்ட முதற் கலீபா அவையனைத்தையும் முறியடித்து இஸ்லாமிய உலகின் ஸ்திரத்தன்மையை முழு உலகுக்கும் பறைசாற்றினார்கள்.

இவர்களையடுத்து, முஸ்லிம்களதும் இஸ்லாமிய உலகினதும் பணிகளைப் பொறுப்பேற்ற இரண்டாம் கலீபா உமர் (றழி) அவர்களும் அதனை எதிர்கொண்ட விதமும் அவர்களது ஆளுமையும் அவர்கள் அக்காலத்திற்குப் பொருத்தமானவரே என்பதை மிக ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது.

கலீபா அவர்கள் பதவியேற்றதும் எதிர் நோக்கிய முதலாவது சவாலாக பாரசீகத்தில் புனித போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படையை இக்கட்டான நிலையிலிருந்து மீட்டெடுக்க வேண்டிய அவசர நடவடிக்கையாகும். எனவே இறாக் நோக்கி கிட்டத்தட்ட நான்காயிரத்திற்கும் அதிகமான வீரர்கள் கொண்ட உதவிப்படையொன்றினை உடனடியாக அனுப்பி வைத்தார்கள். அத்துடன் உரோம, பாரஸீக வல்லரசுகளின் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அப்பகுதி மக்களுக்கு விமோசனத்தின் வழிகளைத் திறந்து விடுதலை பெற்றுக் கொடுத்தலை சவாலாக ஏற்று அதனை மிகவேகமாக செய்து முடித்தார்கள்.

அந்த வகையில் காதிஸிய்யாப் போர், நஹாவன்த் போர் போன்ற இலட்சக்கணக்கான பாரஸீக எதிரிப் படைகளை முறியடித்து இஸ்லாமிய உலகின் இருப்பினை உறுதி செய்து விரிவாக்கம் செய்வதும் அவர்கள் முன்னால் காணப்பட்ட பெரும் சவால்களாகும் அவற்றினையும் தனது, விசுவாசமும் அர்ப்பணமும் மிக்க இஸ்லாமிய தளபதிகள் வீரர்கள் ஊடாக அல்லாஹ்வின் உதவியுடன் வெற்றி கொண்டார்கள். பலஸ்தீனை குறிப்பாக மஸ்ஜிதுல் அக்ஸாவை தமது நேரடிப் பிரசன்னத்தின் ஊடாக இஸ்லாமிய ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்து அம்மக்களுக்கும் மஸ்ஜிதுக்கும் பாதுகாப்பு வழங்கினார்கள்.

மேலும் இஸ்லாமிய உலகு என்றுமில்லாதவாறு, அரேபியாவுடன் இணைந்ததாக உரோம, பாரஸீக வல்லரசுகளின் ஆள்புலங்களையும் உள்ளடக்கிய பரந்து விரிந்த நிலப்பரப்பினை கொண்டதாக வியாபகம் பெற்ற போது அதன் நிதி, நீதி, நிர்வாக விவகாரங்கள் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பின் கீழ்க் கொண்டு வரப்பட வேண்டியது பெரும் சவாலாகக் காணப்பட்டது. அதனைத் தனது கடமையாக உணர்ந்த கலீபா மிகச் சிறப்பான வகையில் அதற்கான கட்டமைப்புக்களை உருவாக்கி உலகம் வியக்கும் சிறப்பான வல்லரசு ஒன்றினை உருவாக்கினார்கள்.

இறுதியில் எதிரிகளின் சதித் திட்டத்தின் மூலம் ஷஹீதாக்கப்பட்ட கலீபா தமக்குப் பின்னால் முஸ்லிம்கள் நிலைகுலையாதிருப்பதற்காக ஷூறாத் தெரிவு முறைமைக்கு அடித்தளமிட்டு விட்டுச் சென்றார்கள். அதனடிப்படையில் கலீபாவான உஸ்மான் (றழி) அவர்கள் தமது கிலாபத்தில் முன்சென்றவர்களைப் பார்க்கிலும் அதிகமான சவால்களை எதிர்நோக்கினார்கள்.

மிக வேகமாக விரிவடைந்து கொண்டிருந்த இஸ்லாமிய சாம்ராஜ்யம் இவர்களது காலப்பகுதியில் வட ஆபிரிக்காவின் எல்லையை அடைந்ததுடன் ஆசியாவிலும் மிக நீண்ட தூரம் பிரவேசித்திருந்தது. இதன் பயனாக இஸ்லாமிய உலகில் செல்வம் கரைபுரண்டது. மக்களது வாழ்க்கை வழிமுறைகளிலும் மாற்றங்கள் தோன்றிக் கொண்டிருந்தன. இவற்றைச் சரி செய்து நிர்வாகத்தை வழிநடாத்துவது அன்றைய சூழலில் கலீபாவுக்குப் பெரும் சவாலாகக் காணப்பட்டது. அது மட்டுமல்லாது பெருந்தொகையாக இஸ்லாத்தில் நுழைந்து கொண்டிருந்த அரேபியரல்லாத முஸ்லிம்கள் அராபிய இஸ்லாமிய கலாசாரத்தில் இணையும் போதும் பல புதிய பிரச்சினைகள் தோன்றியதுடன் அவற்றிற்குப் பொருத்தமான தீர்வுகளை முன்வைப்பதும் கலீபாவுக்கு சவாலாக மாறியது.

இவ்விதமிருக்க முன்சென்ற இருவரது ஸ்திரமானதும் கட்டுப்பாடுடையதுமான நிர்வாகத்தில் சாதிக்க முடியாதவற்றை கலீபாவின் இரக்க சுபாவத்தைப் பயன்படுத்தி சாதித்துக் கொள்ள முயன்ற இஸ்லாமிய விரோத சக்திகளின் குழப்பமும் சதிமுயற்சிகளும் கலீபாவின் முன்னால் மிகப் பெரும் சவாலாகக் காணப்பட்டது.

இவையனைத்தையும் இரும்புக் கரம் கொண்டு அடக்க பல்வேறு வாய்ப்புக்கள் இருந்தும் கூட சமாதான வழிகளிலும் விட்டுக்கொடுப்புடனும் தீர்த்துக் கொள்ள நினைத்த கலீபா துரோகிகளால் பதவி விலகுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஆயினும் இஸ்லாத்தில் அவர்களது உறுதியும் நபி (ஸல்) அவர்களது வாக்கின் மீதுள்ள அசையாத நம்பிக்கையும் அவர்களுக்கு தைரியத்தையும் மனவுறுதியையும் கொடுத்தன. ஆதலால் தான் ஷஹீதாக்கப்படும் வரை இஸ்லாமிய அரசை அரக்கர்கள் கையாட விட்டு வைக்கவில்லை.

இஸ்லாமிய கிலாபத்தின் நான்காம் கலீபாவான அலீ (றழி) அவர்கள் இக்கட்டான சூழலில் கிலாபத்தை ஏற்றமையால் முன்சென்றவர்களைப் பார்க்கிலும் அதிகளவிலான சவால்களை எதிர் கொண்டார்கள்.

அவற்றுள் மிக மிக ஆபத்தனாதாக மதீனாவில் இரத்தமோட்டிக் கொண்டிருந்த சதிகாரக் கும்பலின் அத்துமீறல்கள் காணப்பட்டன. அவற்றைக் கையாள்வதில் அவர்கள் பாரிய சவால்களை எதிர்கொண்டார்கள் ஏனெனில் தலைநகரின் அன்றைய பாதுகாப்பு கட்டுப்பாடு போன்றவற்றைத் தீர்மானிக்கும் சக்தி ஆயுதம் தாங்கிய குழப்பக்காரர்களின் கரங்களிலேயே காணப்பட்டது, அவர்களை அடக்கி விடவோ அல்லது மதீனாவிலிருந்து பலவந்தமாக வெளியேற்றவோ போதிய சக்தி கலீபாவுக்கு இருக்கவில்லை, அதேநிலையில் கலீபாவின் படுகொலைக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கோரும் சிரேஷ்டமானவர்களின் நெருக்குதல் கள், புதிய கலீபாவுக்கு விசுவாசமாய் செயலாற்ற மறுத்த மாகாண கவர்னர்களின் நிலைப்பாடு கள் போன்றன கலீபாவை இக்கட்டான நிலைக்குத் தள்ளியிருந்தன. ஆயினும் கலீபா அவசரம் கொள்ளவில்லை, கொலைகாரக் கும்பலை தந்திரமாகவே மதீனாவிலிருந்து வெளியேற்றி அதன் பின் நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்கள் என்பது அவர்களது பிந்திய நடவடிக்கைகள் மூலம் புலப்படுகின்றன.

மேலும் அரசியல் நோக்கம் கொண்ட சில மாகாண ஆழுநர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் கலீபாவைப் போர்க்களம் செல்லுமளவு நிர்ப்பந்தித்தன. இவை தவிர இஸ்லாத்தின் எல்லைமீறிய கவாரிஜ்கள், மு∴தஸிலாக்கள் போன்றோரின் கிளர்ச்சிகள், அனைத்திற்கும் மேலாக ‘‘ஷீஅத்து அலீ’’ அதாவது அலீ (றழி) அவர்களது அணியினர் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் குழப்பத்தில் ஆழ்த்தி அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்ல முனைந்த யூதர்கள், அவர்களது அடிவருடிகள், அது மட்டுமல்லாது அயல்நாட்டுக் காபிர்களின் சதி முயற்சிகள் போன்றன கலீபாவுக்குப் பல்முனை சவால்களாயமைந்தன.

எவ்வாறாயினும் கலீபா அவர்கள் சளைத்து விடவில்லை அனைத்து சவால்களையும் எதிர் கொண்டு அவற்றினை முறியடித்து வெற்றியீட்டிக் கொண்டிருந்தர்கள். எனவே இவர்களை வெற்றிகொள்வது முடியாத காரியம் என்பதனை புரிந்து கொண்ட எதிரிகள் சதிமுயற்சி ஊடாக கலீபாவை படுகொலை செய்தனர்.

இவ்வாறு பல்முனை சவால்களை எதிர்கொண்ட நாற்பெரும் கலீபாக்கள் இறையுதவி, நபிகளாரின் வழிகாட்டல்கள், இஸ்லாத்தில் அவர்களுக்கிருந்த அசைக்கமுடியாத உறுதிப்பாடு போன்றவற்றினால் அத்தனை சவால்களையும் எதிர்கொண்டு இஸ்லாத்தையும் முஸ்லிம் உலகையும் பாதுகாத்தனர் என்பது வரலாறு கூறும் உண்மைகளாகும்.

மேலும் அக்கால நிகழ்வுகளின் பின்னணிகள் அவற்றை கலீபாக்கள் கையாண்ட விதங்கள் போன்றவற்றை எடுத்து நோக்கும் போது நான்கு கலீபாக்களது வருகையின் ஒழுங்கும் அவர்களது ஆளுமைக்குப் பொருத்தமான காலப்பகுதியாய் அமைந்துள்ளமையை அவதானிக்க முடியும்.